# ïJ xU

# ešy nfŸÉ?

ஆசிரியர்

**வில்லியம் மெக்டொனால்டு**

**மோரியா ஊழியங்கள்**

தபால் பெட்டி எண் 2540, சென்னை - 600 030

Publication No: 003
முதல் பதிப்பு 2006

**That's a good Question** in Tamil

Copyright: © William MacDonald

**இது ஒரு நல்ல கேள்வி?**

*ஆசிரியர்*

**வில்லியம் மெக்டொனால்டு**

**விலை: ரூ.15/–**

*சுவிசேஷ பிரபல்ய ஊழியத்திற்காக 50-க்கு மேற்பட்டு, சலுகை விலையில் பிரதிகள் பெற, பதிப்பகத்தாருடன் தொடர்பு கொள்க.*

Moriah Ministries
Post Box No. 2540
Shenoy Nagar
Chennai - 600 030, India
Phone: 91-044-2622 4010

Moriah Ministries
C/o Bethany Gospel Hall
16 North St. Mannarpuram
Tiruchirappali - 620 020
Tamil Nadu, India

Email: <moriahministries@gmail.com>

Cover Design: *Concept Mr. N. John Jeyanandam*

Graphics: Sungrafixs, <sungrafixs@yahoo.com>

Typeset by: Moriah Ministries

## பதிப்பகத்தார் குறிப்பு

*மனுமக்களாகிய நாம் நம் ஆத்தும இரட்சிப்பை அடையும் வழியினை எளிய முறையில் தெளிவாக இச்சிறு புத்தகம் எடுத்துக் கூறுகிறது. இதனை தேவ ஊழியரான வில்வியம் மக்டொனால்டு அவர்கள், கேள்வி -- பதில் முறையில், அநேகருடைய உள்ளங் களில் எழும் ஐயங்களைக் களைந்து விடும் வகையில் எழுதியுள்ளார். இதை நம் நாட்டு மக்களும் பயன டையும்படி, தமிழில் மொழி பெயர்த்து எழுதுகையில், நம் நாட்டாரின் பண்பாட்டிற்கும், சமுதாயப் பின் னணிக்கும் ஏற்றபடி எழக்கூடிய இரு கேள்விகள் (கேள்வி எண் 8, 21) இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பாளர்களால் எழுதப்பட்ட இவ்விரு பதில்களையும் இதில் இணைப்பதற்கான அனுமதியை இந்நூலாசிரியர் எங்களுக்கு அளித்துள்ளார்.*

*இச்சிறு நூலின் மொழிப்பெயர்ப்பில் உதவிய சகோதரர்கள் ந. ஜான் ஜெயானந்தம், சென்னை, மற்றும் டேவிட் தையான், பெங்களூர் ஆகியோருக்கு எங்கள் நன்றி.*

*இதைக் கருத்தோடு படித்து, சொல்லப்பட்டுள்ள இறைச் சத்தியங்களை ஏற்றுக்கொள்ளவும், ஆத்தும இரட்சிப்பாகிய நித்திய பயனை நீங்கள் அடையும் படிக்கும், அன்பின் பரலோக தந்தை உங்களுக்கு அருள்புரிய வேண்டும் என்ற ஜெபத்துடன் உங்கள் கரங்களில் கொடுக்கிறோம்.*

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | v |
| | நாங்கள் தரும் உறுதிமொழி | vii |
| 1 | வாழ்க்கைப் பிரச்சினை | 1 |
| 2 | பாவமும் அதன் தன்மைகளும் | 3 |
| 3 | மதக் கொள்கைகள் | 7 |
| 4 | திருமறையின் பத்துக் கற்பனைகள் | 10 |
| 5 | பயனற்ற சுய முயற்சிகள் | 14 |
| 6 | மனமாறுதல் | 15 |
| 7 | சுய கிரியை | 16 |
| 8 | கிறிஸ்தவ அனுசாரங்கள் | 18 |
| 9 | கிருபை | 19 |
| 10 | ஆன்ம இரட்சிப்பு | 20 |
| 11 | விசுவாசம் என்றால் என்ன? | 25 |
| 12 | எளிய சுவிசேஷம் | 29 |
| 13 | இரட்சிப்புக்குப் பின் | 32 |
| 14 | இரட்சிப்பை அறிதல் | 38 |
| 15 | இரட்சிப்பைப் பற்றின ஐயங்கள் | 40 |
| 16 | தேவன் அன்புள்ளவரல்லவா? | 44 |
| 17 | சில தடைகள் | 46 |
| 18 | இரட்சிக்கப்பட்ட பின் | 48 |
| 19 | தயக்கம் வேண்டாம் | 51 |
| 20 | காலம் கடத்த வேண்டாம் | 52 |
| 21 | இரத்தினச் சுருக்கம் | 54 |




# இது ஒரு நல்ல கேள்வி?

## முன்னுரை

மனுமக்களாகிய நம் வாழ்வில் தற்செயலாக எதுவும் நடை பெறுவதில்லை. அனைத்தும் வல்ல இறைவனால் திட்டமிடப்பட்டவையே ஆகும். அல்லது அவரால் அனுமதிக் கப்பட்டவைகள் ஆகும்.

இச்சிறு புத்தகம் உங்கள் கையில் கிடைக்கப் பெற்றிருப்பதும் ஏதோ தற்செயலென்று கருத வேண்டாம். இப்புத்தகம் சத்தியத்தை எடுத்துரைக்கிறது. அதைத் தாங்கள் மனதார ஏற்றுக்கொண்டால் உங்கள் வாழ்க்கை ஓட்டத்தின் திசை திருப்பப்படும். அது மட்டுமல்ல, நீங்கள் உங்கள் பாவத்திற்கான மெய்யான மன்னிப்பை எவ்வாறு பெற்று உங்கள் ஆத்துமாவில் களிகூர முடியும் என்பதையும், தூய்மையும் நீதியுமுள்ள தேவனிடமிருந்து மன நிம்மதியையும் சமாதானத்தையும் எவ்வாறு அடைவது என்பதைப் பற்றியும் இந்நூல் தெளிவாக விளக்குகிறது. இவ்வுலக வாழ்க்கை முடிந்த பின்பு விண்ணுலகில் நமக்கு ஒரு நிலையான நித்திய வீடு உண்டு என்பதைப் பற்றியும் இது எடுத்துரைக்கிறது.

உங்கள் மனதில் பற்பல கேள்விகள் எழுகின்றன, ஐயங்கள் தோன்றுகின்றன அல்லவா? அவைகளுக்கான பதில்கள் பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அநேகர் கேட்கும் பலவிதமான கேள்விகளுக்கு இங்கு பதில் நிச்சயம் உண்டு. இந்நூலைப் படிப்பதற்குத் தயவு செய்து சில நிமிடங்களைச் செலவிடுங்கள். தயக்கமின்றி உண்மையுடன் கவனமாக வாசியுங்கள். இதில் கடைசியாகக் கேட்கப்பட்டுள்ள கேள்விக்குத் தாங்கள் தரும் விடை மிக மிக முக்கியமானதும், அவசியமானதும் ஆகும். அது உங்கள் வருங்கால வாழ்க்கையையும், நித்தியத்தையும் நிர்ணயிக்கக் கூடியவையாகும். தாங்கள் எடுக்கும் தீர்மானமும், தரும் பதிலும், ஒன்று நித்திய பேரின்பத்தைக் கொண்டுவரும் அல்லது நித்திய இழப்பை உங்கள் ஆத்துமாவுக்கு வருவிக்கும். இதில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளுக்குச் செவிமடுத்துச் செயல்படுவீர்களானால் நீங்கள் என்றென்றும் நன்றிக் கடமையுள்ளவராக இருப்பீர்கள்.

*– ஆசிரியர்.*



## நாங்கள் தரும் உறுதிமொழி

தூய வேதாகமம் நமக்கு ஒரு உறுதியையும், நிச்சயத்தையும் அளிக்கிறது.

“பரலோக பிதாவினுடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ, அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்” (யோவான் 7:17), என்ற இறை வசனம் நமக்கு உறுதிமொழி கொடுக்கிறது. இவ்வசனம் நமக்கு தேவன் அருளியுள்ள உறுதியளிக்கும் நங்கூரமான நல்வாக்கு ஆகும்.

மெய்யான விண்ணுலக இறைவனாகிய கர்த்தரை உங்கள் வாழ்வில் சோதித்துப் பாருங்கள். அவர் உங்களுக்கு தம்மை வெளிப்படுத்த வேண்டுமென்று கேளுங்கள். இச்சிறு புத்தகத்தைத் தொடர்ந்து படிக்கையில், குறிப்பாக மேற்கோளிடப்பட்டுள்ள வேத வசனங்களைக் கவனம் செலுத்திப் படித்துச் சிந்தியுங்கள்.

இப்புத்தகத்தைப் படிக்கும் அடுத்த சில நிமிடங்கள் உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான நேரம் ஆகும். ஆம், மெய்யான கடவுளின் செய்திக்கு – அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அதைத் தாங்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டால் – கீழ்ப்படிந்தால், உங்களுக்கு நித்திய ஜீவன் – அழியாத நித்திய வாழ்வு கிட்டும். முக்திபேறு அடைவீர்கள். இது நிச்சயம்; ஆம், இது உறுதி.

# இது ஒரு நல்ல கேள்வி?

## I வாழ்க்கைப் பிரச்சனை

**1. மனிதனுடைய வாழ்வில் மிக முக்கியமானது எது?**

நமக்கு உடற் சுகம் மிகவும் அவசியமானதாகும். ஆயினும் இது மனித வாழ்வில் மிகவும் முக்கியமானது அன்று. ஏனெனில் காலப் போக்கில் நாம் அனைவரும், வயது சென்று, இறக்க வேண்டியவர்களே. அல்லது சடுதியாகவும் மரணம் வரலாம்.

பணமும் பொருளும் வாழ்வில் முக்கியமானவை தான். ஆயினும் அவை மட்டும் போதுமானவையல்லவே! அவையனைத்தையும் ஒரு நாளில் நாம் விட்டு விட்டுச் செல்ல வேண்டுமல்லவா?

வாழ்வில் உல்லாசம், சுகபோகம், இன்பம் ஆகிய வைகள் அவசியம்தான். ஆயினும் இவையனைத்தும் இறுதிவரை நீடித்திருப்பவை அன்று. இவைகள் நம்மை விட்டு எளிதில் அகன்று விடுகின்றனவே!

காலத்தின் குறுகிய தன்மையையும், நித்தியத்தின் நீண்ட நிலையையும் கண்ணோக்கிச் சிந்திக்கும்போது, மரணத்திற்குப் பின்பு உள்ள நம் ஒவ்வொருவருடைய நித்திய வாழ்வும் பத்திரப்படுத்தப்பட்டு, உறுதி செய்து

கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். மரணத் திற்கு அப்பால் உள்ள நம் வாழ்க்கை மோட்சமாகவே எப்போதும் இருக்க வேண்டும். அது நரகமாக இருக்கக் கூடாது.

ஆண்டவராகிய இயேசு கருத்துடன் கூடிய ஒரு கேள்வியை எழுப்புகிறார்:

> *"மனிதன் உலகம் முழவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை (ஆத்து மாவை) நஷ்டப் படுத்தினால் (இழந்து விட் டால்) அவனுக்கு லாபம் என்ன? மனிதன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மாற்கு 8:36,37).*

இதைச் சற்று கவனமாக சிந்தனை செய்து பாருங்கள்.

**2. பிரச்சினைகள் எழக்காரணம் என்ன? பிரச்சினைகள் பற்றிய கேள்விகள் ஏன் எழுகின்றன?**

நம் அனைவரின் பிரச்சினையே பாவம்தான்! பாவமே மனிதனைத் தூய தேவனிடமிருந்து பிரித்து விட்டது. பாவமே அவனை மோட்சத்திற்குத் தகுதியற்றவனாக்கி, நரகத்திற்கு அழைத்துச் செல்கிறது.

> *"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு, அவரு டைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசாயா 59:2).*

என்று திருமறை எடுத்துரைக்கிறது.



# 2 பாவமும் அதன் தன்மைகளும்

**3. பாவம் என்றால் என்ன?**

தேவனுடைய பரிபூரணத்திற்கும், முழுமைக்கும் குறைவானது எல்லாம் பாவம்தான். "எல்லோரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகிப் போனார்கள்" (ரோமர் 3:23), என்று தேவன் எடுத்துக்கூறும் போது, அவர் இவ்வாறே பொருள் கொள்ளுகிறார்.

நாம் செய்யக் கூடாது என்று அறிந்திருப்பதைச் செய்வதே பாவம். "அநீதி எல்லாம் பாவம்தான்" (1 யோவான் 5:17).

நாம் செய்ய வேண்டும் என்று அறிந்திருப்பதைச் செய்யத் தவறுவதும் பாவம் ஆகும். "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற் போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக்கோபு 4:7).

மனச்சாட்சியை மீறுவது பாவமாகும். "விசுவாசத் தினால் வராத யாவும் பாவமே". (ரோமர் 14:23). சுய சித்தமும், ஒழுங்கின்மையும் பாவமாகும். அது "உம் முடைய விருப்பத்தின்படியும், என் சித்தத்தின்படியும் ஆகட்டும்" என்று தேவனிடம் கூறுவதற்கு ஒப்பாகும்.

நம்முடைய எண்ணங்கள், சொற்கள், செயல்கள் மட்டும் பாவமாயிருப்பதில்லை. நம் ஒவ்வொருவருடைய உள்ளான நிலையே பாவத்தன்மை உடையதாயிருக் கிறது. நாம் அனைவரும் பாவத்தில் உருவாகி, சுபாவப்படி,

பாவிகளாகவே உள்ளோம். நாம் நடப்பித்துள்ள செயல்களை விட, நம்முடைய உள்ளான நிலைமை – நம் இருதயமே மகா கேடுள்ளதாயிருக்கிறது.

**4. தாங்கள் என்னைக் குற்ற உணர்வுள்ளவனாக ஆக்குகிறீர்கள். நான் ஒரு நல்ல மேன்மையுடைய தோற்றமுள்ளவனாக இருப்பதைத்தாங்கள் விரும்பவில்லையா?**

நீங்கள் குற்ற உணர்வடைந்து அதற்காக ஒரு தகுந்த நடவடிக்கை எடுப்பதையே தேவன் நாடுகிறார். நீங்கள் ஒரு நோயாளி என்று ஒப்புக்கொண்டால் மட்டுமே, ஒரு வைத்தியரிடம் சென்று அதைக் குணமாக்கும் வழியை நாடுவீர்கள். "பிணியாளிக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டுவதில்லை" (லூக்கா 5:31) என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார்.

தான் ஒரு பாவி என்று ஒப்புக்கொள்ளும் போது மட்டுமே, ஒருவன் தன் ஆத்துமா இரட்சிக்கப்பட இயேசு கிறிஸ்துவினிடம் வருவான். மலைச் சிகரத்தின் விளிம்பில் நின்று தட்டுத்தடுமாறி விழக்கூடிய ஒருவனுக்கு கவர்ச்சியான நல்ல அழகுள்ள தோற்றம் இருந்து பயன் என்ன?

**5. நல்லவர்கள் அனைவரும் பரலோகத்திற்கும், தீயோர் அனைவரும் நரகத்திற்கும் செல்வார்களானால், அதைப்பற்றி நான் ஏன் கவலை கொள்ள வேண்டும்?**

உங்கள் யூகம் தவறாயிருப்பதால் அதன் விளைவும் தவறானதாகவே அமையும். நல்லோர் எனக்கருதப்படுபவர்கள் எல்லோரும் மோட்சம் செல்வார்கள் என்கிற



உங்களது யூகம் தவறுடையதாகும். தேவனுடைய நீதியான நிர்ணயத்தின்படி நல்லவர்கள் எவருமே இல்லை. "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை" (பிரசங்கி 7:20). தேவனுடைய கிருபையினால் ஆத்தும இரட்சிப்பை அடைபவர்கள் மட்டுமே பரலோகம் செல்ல முடியும்.

ஒரு தர்க்கத்தின் ஆதாரமே தவறுடையதாக இருக்குமானால், அதன் முடிவும் தவறாகவே அமையும். நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் ஆன்மீக இரட்சிப்பை அடையாதவர்களாயிருப்பீர்கள் என்றால் நீங்கள் இப்பொழுது அதிகமாகக் கவலைப்பட வேண்டியவராக இருக்கிறீர்கள்.

**6. எனக்குத் தெரிந்திருக்கிற சிலரைப் போல, நானும் தீயவனாக இருக்கிறேன் என்று தாங்கள் கூறுகிறீர்களா?**

உங்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு உங்களை ஒப்பிட்டுப் பார்த்து நீங்கள் அவ்வளவு மோசமானவரகவோ, தீயவராவோ இல்லையென்று தாங்கள் கருதிக்கொள்ளலாம். ஆனால் இது சரியான அளவுகோல் அல்ல. உங்களுடைய சொந்த அளவுகோலை வைத்துக் கொண்டு நீங்கள் உங்களையே அளந்து கொள்ளுகிறீர்கள். "தங்களைக் கொண்டு தங்களை அளந்து கொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல" (2 கொரி. 10:12) என்று பரிசுத்த வேதம் கூறுகிறது. தூய்மையும், நீதியுமுள்ள தேவனுடைய கண்ணோட்டம் என்ன என்பதே முக்கியம். தூய தேவனது பார்வையிலே நாம் பாவிகள் என்று கணிக்கப்பட்டிருக்கிறோம்.

**7. என்னால் இயன்ற வரை தகாதவைகளையும் தீமைகளையும் விலக்கி, நேர்மையுடன் நல்லவனாக வாழ்ந்து, நன்மைகள் செய்து வந்தால் அதுவே போதுமானதல்லவா?**

இப்பூமியில் வாழும் எக்காலத்து அனைத்து மக்களும் பாவத்தில் வீழ்ந்துபோன மனிதர்களாகவே இருக்கின்றனர். அதினிமித்தம் அவர்கள் தேவனுடைய சாபத்திற்கு உட்பட்டவர்களே ஆவர். இப்பாவத்தின் விளைவாக அவனுக்கு வந்துள்ள தேவ கோபமும், தேவ தீர்ப்பும், அம்மனிதனில் நிலை நிற்கிறது. இத்தகைய மனிதன் தன் சுய யுக்தியிலும், அறிவின் அடிப்படையிலும், தன் சுய கணிப்பின்படியே நேர்மை, உண்மை, நீதி, தூய்மை என்று கருதுகிறவைகளாயுள்ள அனைத்திலும், தேவனுடைய நீதி நேர்மையின் அளவு கோலை எட்டிப் பிடிக்கக் கூடாதிருக்கிறான். அவையாவும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியாதபடி அசுத்தமாகவே இருக்கின்றன. அது மாத்திரமல்ல, ஒரு குஷ்டரோகியின் கையில் உள்ள ஒரு பொருள் எவ்வாறு அக்குஷ்டத்தினால் அசுத்தப்பட்டதாக உள்ளதோ, அவ்வாறே பாவக் குஷ்டத்தினால் பிடிக்கப் பட்டுள்ள மனிதன் செய்யும் 'நல்ல' காரியங்களும், 'புண்ணிய' செயல்களும் இருக்கின்றன. இந்நிலையில் எந்த நல்ல மனிதனும் நீதியும் தூய்மையுமுள்ள தேவனுக்குத் திருப்தி அளிக்கக்கூடாதவனாக இருக்கிறான். இவ்வித நற்செயல்களின் மூலமாக, ஆன்மாவில் அசுசியும் தீட்டும் உள்ள மனிதன் தேவனை என்றும் கிட்டிச் சேரக்கூடாதவனாகவே இருக்கிறான்.



# 3 மதக் கொள்கைகள்

**8. தாங்கள் கூறுவது சரியென்று தோன்றுகிறது. ஆனால் உலகத்தில் பற்பல மதங்கள் உள்ளனவே. அவனவன் தான் பின்பற்றிவரும் மதக்கோட்பாடுகளை நம்பி, அம்மதக் கொள்கையின்படி பூஜைகள், ஜெப தபங்கள் மற்றும் அனுசாரங்களைத் தவறாது நிறைவேற்றி வந்தால் தேவனைத் திருப்தி செய்யலாம் அல்லவா?**

தங்களுடைய வாதம் உண்மைக்கு ஏற்றதாக இல்லை; மனித சிந்தைக்கும், அறிவுக்கும் கூட அது ஏற்புடைய தாயில்லை!

ஒவ்வொரு மதமும் தேவனைப் பற்பல பெயரினால் அழைத்தும், தேவனைப் பிரியப்படுத்த பலவித உபாயங்களைச் செய்வதுபோல் பொதுவாக பார்வைக்குக் காணப்பட்டாலும், ஒவ்வொரு மதமும் அதனதன் தேவனைப் பற்றிக்கொடுக்கும் குணப்பண்புகளும், நோக்கங்களும், செயல் முறைகளும், அத்தேவனை அடையும் வழி முறைகளும் ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாதபடி பலவிதங்களில் வேறுபட்டிருப்பதைக் காணமுடியும். பல மதங்களின் வேத உபநிட புத்தகங்களும், புராணங்களும், போதனைப் புத்தகங்களும், அடிப்படை கருத்துகளிலும், நோக்கங்களிலும், செயல் அளவிலும் பெருத்த வேறுபாடுகளுடன், ஒன்றுக்கொன்று முறணாக உள்ளதைக் காண்கிறோம். இவைகள் அனைத்தும் உண்மையாக இருக்க முடியா தல்லவா?

அஹிம்சையைப் போதிக்கும் மதத்திற்கும், நரபலிகளாலும், மிருக பலிகளாலும் தேவனைத் திருப்திச் செய்ய

முடியும் எனப்போதிக்கும் சில மதங்களும் எதிர் முனையில் நிற்கின்றன. ஒரே தேவன்தான் உண்டு என்று போதிக்கும் மதங்களுக்கும், பற்பல தேவர்களும், தேவதைகளும் உண்டு என ஒப்புக்கொள்ளும் ஏனைய மதங்களுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. தேவனுக்கு நேரிடையாக ஒரு உருவமும் கொடுக்காது தொழும் மதமும், தேவனுக்கு பலவித உருவங்கள் கொடுத்து சிலை வணக்கம் செய்யும் மதங்களும் முற்றிலும் வேறுபட்டவைகளாம்.

மனிதனுக்கு ஆன்மா உண்டு என்று போதிப்ப வர்களும், இல்லை என்று போதிக்கிறவர்களும் எவ்வாறு ஒத்துபோக முடியும். மனிதன் மரித்தப்பின்பு ஒன்று மில்லாது சூனியமாகிப் போகிறான் என்று சிலரும், மரித்த மனிதன் மறுபிறவி எடுத்து, ஒரு மிருகமாகவோ அல்லது மற்றொரு மனிதனாகவோ பிறவியெடுக்கிறான் என போதிக்கும் மதங்களும், அவ்வாறு இல்லை மரித்தப் பின்னர் நரகமோ, மோட்சமோ செல்ல வேண்டும் என போதிக்கும் ஏனைய மதங்களும் உண்டல்லவா? இவை களில் எதைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்?

பக்தி மார்க்கத்தினால் முக்தி அடையலாம் எனச் சில மதங்களும், கர்ம மார்க்கத்தினால் மட்டுமே அது சாத்திய மாகும் என மற்றும் சில மதங்களும், இல்லை ஞான மார்க்கத்தினால் மட்டுமே அவ்வாறு அடைய முடியும் என வேறு சிலவும் போதிக்கின்றனவே? இதில் எவ்வழியைத் தெரிந்துக்கொள்வது?

மேற்கூறிய சில விவரங்களை உற்று நோக்கும்போது, இவ்வாறு மதங்களுக்கிடையே, அம்மதங்களின் கோட் பாடுகளுக்கிடையே, பற்பல எதிர்முனைகள் மிகுந்து இருப்பதைக் காண்கிறோம். இவையனைத்தும் நமக்கு ஒரு உறுதியைத் தராது குழப்பத்தையே உருவாக்கி விடுகின்றன.



மதங்கள் அனைத்தும் மனிதனால் உருவாக்கப்பட்டு, காலாகாலமாக அவை பலவித வடிவங்களை எடுத்துக் கொண்டுள்ளன. காணக்கூடாத, அறியமுடியாத, புரிந்து கொள்ள இயலாத மெய்யான தேவனை, மனித யுக்தியில் பற்பல தேச மக்கள், பற்பல காலக்கட்டத்தில் உருவாக்கி வைத்த மனித உபாயங்களே இந்த உலக மதங்கள் ஆகும். ஆகையால் அவைகளை நாம் நம்பி பின்பற்று வோமானால், நமது அதிக விலைமதிப்புள்ள ஆத்துமாவை நஷ்டப்படுத்தி, நித்தியத்தை இழந்து விடுவோம். மதங்கள் தேவனைக் கண்டடையும்படி தேடிப்போகும் மனித முயற்சிகளாகும். மாறாக, பாவத்தில் வீழ்ந்துபோன மனிதனை நாடி, கரிசனையோடு தேடி வந்த இயேசு கிறிஸ்துவே, தேவனைப் பற்றிய சத்தியங்களை வெளிப் படுத்தி, மனிதன் இரட்சிக்கப்படும்படி கொடுத்துள்ள வழிமுறையே, நம்பகமானதும், உறுதியானதும், நிச்சய முமாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:

> *“பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோ கத்திலிருக்கிறவருமான மனித குமாரனேயல் லாமல், பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை” (யோவான் 3:13).* என்றும், *“தேவ னிடத்தினின்று வந்தவரே தவிர வேறொரு வரும் பிதாவைக் கண்டதில்லை. இவரே பிதாவைக் கண்டவர். என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண் டென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்க ளுக்குச் சொல்லுகிறேன்” (யோவான் 6:46,47).*

என்றும் கூறுகிறார்.

மெய்யான ஆத்தும இரட்சிப்பென்பது, மதத்தைச் சார்ந்திருப்பது அல்ல; மெய்யான ஒரு இறை மனிதராகிய, தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம்பி, அவரையே சார்ந்திருப்பதாகும்.

# 4 திருமறையின் பத்துக் கற்பனைகள்

**9. கிறிஸ்தவர்கள் பெற்றுள்ள பத்துக் கற்பனை களைக் கைக்கொள்வதும், ஒருவன் இயன்றவரை நற்கிரியைகளையும், நன்மைகளையும் செய்வதும் போதுமானதல்லவா?**

பழைய ஏற்பாட்டில் தேவன் கொடுத்துள்ள பத்துக் கட்டளைகளின் உண்மையான ஆன்மீக எதிர்பார்ப்புகள் என்ன என்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுத் துள்ள விளக்கத்தின் வெளிச்சத்தில் நாம் முதலாவது சிந்திக்க வேண்டும்.

1. வேறு தேவர்கள் இல்லை. அதாவது பரலோகின் மெய்யான நீதியும் நேர்மையுள்ள தேவனுக்கே நம் சிந்தை யிலும் செயலிலும் முதலிடம் கொடுக்க வேண்டும். இது பிற இன மக்களின் புராதன கடவுள்களையும் வழிவழியாக வழிபடும் கடவுளெனப்படுபவர்களையும், சமுதாய முறை மைகளையும் மதக்கோட்பாடுகளையும் விலக்கிவிட வேண்டு மென்பது மட்டுமல்ல, சுயம், ஜாதி, அந்தஸ்து, படிப்பு, பணம், சமுதாயம், அதிகாரம் போன்றவைகளுக்கு நம்முடைய இருதயத்திலும், வாழ்க்கையிலும் அரியா சனத்திற்கு ஒப்பான உயர்ந்த ஒரு மேலிடத்தைக் கொடுக் கக்கூடாது. கர்த்தர் மட்டுமே, வானத்தையும் பூமியையும் அதின் நிறைவையும் படைத்துள்ள தேவன். அவரே நம் முடைய ஒரே மெய்யான தேவனாக, நம் வாழ்வின் எல்லை யெங்கிலும் வியாபித்திருக்க வேண்டும்.



2. விக்கிரகங்கள் முற்றிலும் கூடாது – விக்கிரகங்கள் என்று கூறும்போது மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள சிலைகள், பிம்பங்கள், சித்திரங்கள் என்று மட்டும் கருது கிறோம். ஆனால் இந்தத் தெய்வீக கட்டளை, வீடு, கார், மனைவி, மக்கள், பணம், அந்தஸ்து போன்றவைகளைக் கனமுடையதாகக் கருதுவதை விக்கிரக ஆராதனை என்றே கருதுகிறது.

3. கர்த்தருடைய நாமத்தை வீணாக வழங்கா திருத்தல். இது தவறான முறையில் சாட்சி சொல்லி உறுதிப்படுத்துதல், மற்றும் சபித்தல், வீண் பேச்சு ஆகிய வைகளையும் குறிப்பதாயுள்ளது.

4. ஓய்வு நாளை ஆசரித்தல். வாரத்தின் ஏழு நாட்களில் ஒரு பகுதியை தேவ ஆராதனைக்கும், அவருடைய ஊழியத்திற்கும் ஒதுக்கி வைத்தலை இது குறிக்கும்.

5. தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுதல். பெற்றோரை அவமரியாதையாக நடத்துதல், அவர் களுக்குக் கீழ்ப்படியாதிருத்தல், அவர்களிடம் இருந்து பொருட்களை அபகரித்துக்கொள்ளுதல் ஆகியவைகள் இதற்கு எதிரான செயல்களாகும். அவர்களைக் கரிசனை யாகக் கவனிப்பதும் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளு தலும் இதில் அடங்கும்.

6. கொலை செய்யாதிருத்தல். ஒருவேளை நீங்கள் ஒருவரையும் கொலை செய்யாதிருப்பினும், நீங்கள் தேவனுடைய ஒரே பேறான குமாரனைச் சிலுவையில் அறைந்துள்ள குற்றத்திற்குள்ளாயிருக்கிறீர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நம்முடைய பாவமே இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குக் காரணம். பகை, கோபம், ஆகிய பண்புகள் கருவாக இருக்கும்பொழுதே, அவை தீச்செயலாக உருவெடுக்காவிடினும், கொலைக்

குற்றமாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து போதித்துள்ளார் (மத். 5:21,22; 1 யோவான் 3:15). மற்றும் கருச்சிதைவும் கொலை பாதகமாகவே கருதப்படும்.

7. விபச்சாரம் செய்யாதிருத்தல். திருமண உறவுக்கு அப்பாற்பட்ட எல்லா பாலியல் உறவுகளையும் இது தடை செய்கிறது. இச்சையோடு ஒரு பெண்ணைப் பார்ப்பதையும் விபச்சாரமாகவே ஆண்டவர் இயேசு கருதுகிறார் (மத்தேயு 5:28).

8. திருடாதிருத்தல். பிறருடைய எந்த ஒரு பொருளையோ, அரசாங்கத்தின் மற்றும் வேலை செய்யும் நிறுவனத்தின் பொருட்களையோ எடுத்துக்கொள்ளுதலும், அபகரித்தலும் திருடுவதாகும். அது மட்டுமல்ல மெய்த் தேவனுக்கு உரித்தாயிருக்கிற துதி, கீழ்ப்படிதல், ஊழியம், மகிமை செலுத்துதல் ஆகியவற்றையும் கொடாது அவைகளை நாம் களவு செய்துவிடக்கூடாது.

9. பொய் சொல்லாதிருத்தல். வருமானத்தைக் குறைத்துக் காட்டி வரி குறைத்தல், பொய்க்கணக்கு எழுதுதல், தவறான வயதைச் சொல்லுதல், ஒன்றை மற்றதைப் போல் காட்டுதல் – நடித்தல் அனைத்தும் பொய் சொல்லுதலாகும். மிகைப்படுத்துதல், வஞ்சனை செய்தல் ஆகியவைகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

10. பிறர் பொருளை இச்சித்தல். இச்சை மனதில் ஆரம்பமாகிறது. எனவே உள்ளத்தின் எண்ணங்கள் எல்லாம் தூய்மையாக இருக்க வேண்டும். உன் உள்ளான இருதய நினைவுகள் யாவும் தூய்மையுடையவைகளாகவும் நேர்மையாகவும் இருக்கின்றனவா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்தக் கட்டளைகள் அனைத்தையும் சுருக்கி,

*“நம்முடைய முழு உள்ளத்தோடும், முழு பலத்தோடும், முழு சித்தத்துடனும் தேவனிடத்தில் அன்புகூர வேண்டும். இதற்கு ஒப்பான மற்ற கற்பனை, நாம் நம்மிடத்தில் அன்புகூருகிறது போலவே மற்றவர்களிடத்திலும் அன்புகூர வேண்டும்” என்று எடுத்துரைத்திருக்கிறார். (மத்தேயு 22:37; லூக்கா 10:27).*



உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எவரும் இக்கற்பனைகளை முழுமையாக ஒரு போதும் கடைப்பிடித்ததும் இல்லை, கடைப்பிடிக்கவும் இயலாது.

## 10. இந்தப் பத்துக் கற்பனைகளையும் நாம் கடைபிடிக்க முடியாத நிலையிலிருக்க, இவைகள் கொடுக்கப்பட்டதின் காரணம் என்ன?

நாம் பாவிகளாக இருக்கிறோம் என்ற உண்மையை உணர்த்துவதற்காகவே இவைகள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாவத்தைப் பற்றிய அறிவு இக்கட்டளைகளினால் நமக்குத் தெளிவாகிறது (ரோமர் 4:20).

கோணலான ஒரு கோட்டை, அது கோணல் என்று எடுத்துக் காட்டுவது, நேராயுள்ள வேறொரு கோடேயாகும். இந்தப் பத்துக் கட்டளைகள் தேவனுடைய நேர் கோடுகள் ஆகும். அந்நேர் கோட்டுக்கு அருகே நாம் நம்மை நிறுத்தி வைத்துக்கொண்டு, நாம் எம்முறைகளிலெல்லாம் குறைவுள்ளவர்களாயிருக்கிறோம் என்று நம்மையே சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்.

தேவன் அருளியுள்ள கட்டளைகள் பரலோகத்திற்கு நாம் ஏறிச் செல்லும் படிகளாக அமைகிறதில்லை. முகம் பார்க்கும் கண்ணாடி, நம் முகம் கழுவப்பட வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறதே தவிர, கழுவி விடுவதில்லை. உடலில் உள்ள ஜுரத்தின் அளவை அளந்து காட்ட ஜுரம் அளக்கும் கருவி உதவுமே தவிர, அச்ஜுரத்தை போக்கிவிட அது உதவாது.

## 5 பயனற்ற சுய முயற்சிகள்

**11. என்னுடைய சொந்த பாவங்களை நானே பரிகாரம் செய்து, என்னைச் சுத்திகரித்துக்கொள்ள வழி எதுவும் உண்டா?**

இல்லை, ஒரு வழியும் இல்லை!

**12. அப்படியானால் என் பாவங்களுக்காக நான் துக்கப்படுவதும், நான் விரதம் நோன்புகள் முதலி யன எடுப்பதும் தவறு என்று சொல்லுகிறீர்களா?**

தவம், நோன்பு, விரதம் போன்ற வார்த்தைகளையும், அப்படிப்பட்ட கருத்துக்களையும் தேவன் கொடுத்துள்ள தூய திருமறையில் நாம் காண்பது இல்லை. ஏனெனில் அவை நமக்கு எவ்விதப் பயனையும் கொண்டு வருவ தில்லை. இவையாவும் மனிதனுடைய பக்தி முயற்சி களேயாகும். “நம்முடைய நீதியெல்லாம் – அதாவது சுய மேன்மையான நற்செயல்களெல்லாம் – அழுக்கான, அவலட்சனமான கந்தைகளாகவேயன்றி, நலமானதாக நன்மையானதாக தேவ பார்வையில் காணப்படுவ தில்லை” (ஏசாயா 64:6) என்று திருமறை விவரிக்கிறது.

மனம் நொந்த நிலையில் நாம் ஏறெடுக்கும் நோன்பு களையும் – விரதங்களையும் அல்ல, பாவத்திற்காக உள்ளான துக்கத்துடன் மனந்திரும்பிய நிலையில், அவை களை விட்டு விலகி மனந்திரும்புவதையே, தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.



## 6 மனமாறுதல்

**13. “மனந்திரும்புதல்” என்று சொல்லும்போது அதற்கு நீங்கள் என்ன பொருள் கொடுக்கிறீர்கள்?**

பாவம், சுயம், தேவன் மற்றும் கிறிஸ்து ஆகியவை களைப் பற்றி உலகம் கொண்டிருக்கும் எண்ணங்களை விடுத்து, தேவனுடைய சிந்தைக்கேற்ப மனதில் ஏற்படும் வேறுபட்ட சிந்தையே மனம் மாறுதல் ஆகும். இத்தகைய மாறுதல் நம்முடைய உள்நோக்கை மாற்றுவது மட்டு மல்லாது, செயல்பாட்டிலும் மாற்றத்தை வருவிக்கும். அது வெறும் மனமாற்றம் மட்டுமல்ல, மனசாட்சியிலும் அது ஒரு வேறுபாட்டை வருவிக்கிறது. இது பாவியாக இருக்கிற ஒருவன் தேவ பக்தியில்லாமல் தான் இழந்து போயுள்ளதையும், தனது உதவியற்ற, நம்பிக்கையற்ற நிலையையும் அறிக்கையிட்டு தேவ கிருபையின் அவசியத்தை உணருவதாகும். இது ஒரு திசையை நோக்கிச் செல்லும் ஒன்று, அதன் மறு திசைக்கு திரும்பி, எதிர்வழி செல்லுவதாகும். *இது தன் சுயத்திற்கு எதிராக செயல்பட்டு*, தேவன் பக்கம் சாருவதாகும். இதுவே உண்மையான மனந்திரும்புதலாகும். இது பாவத்திற்காகத் துக்கப்பட்டு மனம் நொந்து போவதைக் காட்டிலும் மேலானது. ஏனெனில் அநேகர் பாவத்திற்காகத் துக்கப் படுபவர்களாக இருப்பினும், அப்பாவத்தை விட்டுத் திரும்புவதில்லை.

7

## சுய கிரியை

### 14. என்னுடைய இரட்சிப்பைச் சம்பாதிக்க, என்னை தகுதியாக்கிக் கொள்ள, நானே செய்யக்கூடிய வேறு வழி ஏதேனும் உண்டா? அதுவே எனக்கு அதிக விருப்பமானதாயுள்ளது.

இயற்கையாக இத்தகைய நாட்டம் உள்ளவனாக மனிதன் இருப்பதினால்தான், "கிரியையினால் ஒருவன் இரட்சிக்கப்பட முடியும்" என்ற போதனை அதிக பிரபல மானதாக உள்ளது. மனிதன் தன்னைத்தானே இரட்சித் துக்கொள்ள முடியும் என்ற எண்ணம் கொண்ட இப் போதனை அதிகக் கவர்ச்சியுள்ளதாக இருக்கிறது. இப் போதனை மனிதனுடைய பாவ சுபாவத்திற்கு ஒரு மேன்மையான இடத்தைக் கொடுத்து விடுகிறது.

ஆனால் ஒருவன், தன் சுய முயற்சியினால் தன் னுடைய இரட்சிப்பைச் சம்பாதிக்க ஒரு வழியும் இல்லை. நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நாம் நம்மையே தகுதியுடைய வராக்கிக்கொள்ளமுடியாது. நாம் தேவனுடைய அளவற்ற கிருபையினால் மட்டும் இரட்சிக்கப்படுகிறோம் என்று தேவன் தெளிவாகச் சொல்லுகிறார்.

> *"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டான தல்ல" (எபே. 2:8,9).*



### 15. அப்படியானால் உங்களுக்கு நற்கிரியைகள் செய்வதில் சிறிதும் நம்பிக்கை இல்லையா?

நாம் முன்பு குறிப்பிட்ட வண்ணமாக, நாம் நற்கிரியை களினால் இரட்சிக்கப்படுவது இல்லை என்று தேவ வசனம் தெளிவாகப் போதிக்கிறது. ஆயினும், நாம் தேவகிருபையினால் இரட்சிக்கப்பட்ட பின்னர் நம் வாழ்க்கை முழுவதும் நற்கிரியைகள் நிறைந்த வாழ்க்கை யாகத் தொடரவேண்டும். நற்கிரியைகள் இரட்சிப்புக்குக் காரணமாவதில்லை. ஆனால் கிருபையினால் இரட்சிக் கப்பட்டப் *பின்பு*, அந்த இரட்சிப்பின் விளைவாக நல்ல செயல்களை நடப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது. நற்கிரியை வேர் ஆகாது; அது கனியேயாகும். அது தொடக்கமாகாது – மாறாக அது இரட்சிப்பின் காரணமாக வெளியாகும் விளைவாகும்.

ஒருவன் செய்யக்கூடிய முதல் நற்கிரியை என்ன வென்றால், அவன் கிறிஸ்துவினிடத்தில் தன் நம்பிக் கையை வைப்பதேயாகும். பரலோக தேவன் "அனுப்பின வரை (இயேசு கிறிஸ்துவை) நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று கிறிஸ்து கூறியிருக்கிறார். (யோவான் 6:29). அதைத் தொடர்ந்து தேவனுடைய மகிமைக்காக அவன் எல்லாவற்றையும் செய்கிறான். இரட்சிக்கப்பட்ட ஒருவன் தன் நற்கிரியை களினால் பிறருக்கு நன்மையைக் கொண்டு வருகிறான்.

## 8 கிறிஸ்தவ அனுசாரங்கள்

**16. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த எனக்கு, குழந்தையாயிருந்தபோது ஞானஸ்நானம் கொடுத் தார்களே! அது போதுமானதல்லவா?**

குழந்தைகளாயிருப்பினும், பெரியவராயிருப்பினும் ஞானஸ்நானம் ஒருவரையும் இரட்சிக்காது. அது ஒரு வனைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லாது. குழந்தை களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்பதை ஆதரித்து வேதாகமத்தில் எவ்வித ஆதாரமோ, அதற் குரிய சாயலோ இல்லை. இயேசு கிறிஸ்துவை விசுவா சித்து அவரை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஞானஸ்நானத்தில் சாட்சி கொடுத்துள்ளதாக வேதாகமம் எடுத்துக் கூறுகிறது (அப். 2:41; 8:37).

ஞானஸ்நானம் குழந்தைகளை இரட்சிக்கிறது என்ற போதனை, தேவன் பாரபட்சமுள்ள அநீதியானவர் என்று கூறுவதாகும். ஏனெனில், ஞானஸ்நானம் எடுக்க வாய்ப்பு பெறாத மற்ற குழந்தைகள் என்ன செய்வார்கள்? இப் போதனை ஆண்டவராகிய இயேசுவுக்குப் பதிலாக தண்ணீரையே இரட்சகராக மாற்றிவிடுகிறது. கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு குழந்தைகள் இரட்சிக்கப்படக் கூடுமானால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்திருக்க வேண்டிய அவசியம் இல்லையே. குழந்தைகள் பெறும் ஞானஸ்நானம் எவ்விதத்திலும் பயனற்றதாகும். அவ்வாறு குழந்தை ஞானஸ்நானம் எடுத்துள்ள அநேகர் பலவித பாவ குற்றங்களில் ஈடுபட்டவராக இருக்கிறார்களல்லவா? ஞானஸ்நானம் எடுப்பது மட்டும் ஒரு மனிதனை பர லோகம் அழைத்து செல்லாது.



## 9 கிருபை

**17. கிருபையினால்தான் இரட்சிப்பு என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால் அதன் பொருள் என்ன?**

நாம் தேவ தண்டனைக்கே தகுதியுடையவர்களா யிருக்க, முற்றிலும் தகுதியற்றவர்களாகிய நமக்கு தேவன் காண்பிக்கும் தயவுதான் கிருபை என்று சொல்லப்படும்.

அன்பளிப்பு அல்லது ஒரு இலவச ஈவைப் பெறுதல் என்ற கருத்துடன் இந்தக் கிருபை இணைந்திருக்கிறது. ஒரு வெகுமதியை நீ சம்பாதிக்க முடியாது. சம்பாதித்துப் பெறுவது சம்பளமாகும். பணம் கொடுத்து வாங்குவது விலையாகும். நீ ஒரு ஈவைப் பெற்றுக்கொண்டு 'நன்றி' என்று கூறுகிறாய். அவ்வாறு இலவசமாகப் பெற்று அனுபவிக்கக் கூடியதே கிருபை ஆகும்.

கிருபையையும் கிரியையையும் இணைக்கவோ, ஒன்று சேர்க்கவோ முடியாது. கிரியை அல்லது கிருபை இவைகளில் ஏதோ ஒன்றுதான் செயலாற்ற இயலும்.

கிருபையானது நீதியிலிருந்து அல்லது சட்டதிட்டங் களிலிருந்து வேறுபட்டது. நீதியைப் பெறுதல் என்று கூறும்போது நமக்குத் தகுதியான ஒன்று கிடைக்கிறது. ஆனால் கிருபை என்று சொல்லும்போது ஒன்றுக்கும் தகுதியில்லாத நாம், ஏராளமான தேவதயவைப் பெற்றுக் கொள்ளுதலாகும்.

| 10 | ஆன்ம இரட்சிப்பு |
|---|---|

**18. அப்படியானால் இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? இதைத் தெளிவாகச் சொல்ல முடியுமா?**

ஆம், நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இதைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் இவ்வாறு கூறியிருக்கிறார்: *"நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்"* (யோவான் 3:7). ஒரு மனிதன் மறுபடியும் பிறவாவிட்டால், அவன் ஒருபோதும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணவும், அதில் பிரவேசிக்கவும் முடியாது.

**19. "மறுபடியும் பிறத்தல்" என்று சொல்லும்போது, அதற்கு நீங்கள் கொடுக்கும் பொருள் என்ன?**

"மறுபடியும் பிறத்தல்" அல்லது "புதிய பிறப்பு" என்பது தேவன் நடப்பிக்கும் ஆச்சரியமான, அதிசயமான ஒரு தெய்வீகச் செயலாக உள்ளது. இது நீங்கள் உங்கள் பாவங்களினிமித்தம் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிஸ்துவை விசுவாசத்தினாலே உங்கள் சொந்த இரட்சகரும், ஆண்டவருமாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் போது நடைபெறுவதாகும்.

உங்களுடைய முதல் பிறப்பு சரீரப்பிறப்பாகும். இந்த புதிய மறுபிறப்பு இரண்டாம் பிறப்பாக இருக்கிறது. இது ஆவிக்குரிய புதிய பிறப்பாக உள்ளது.



சரீரப்பிறப்பை மட்டும் பெற்றுள்ள ஒருவன், பின்பு மரணத்தை சந்தித்து, தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். ஆவிக்குரிய புதிய மறுபிறப்பைப் பெற்றவன், இனி தேவ தண்டனையாகிய மரணத்தைக் காண்பதில்லை.

**20. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் மட்டுமே இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி எனக்கூறுகிறீர்களே! இவ்வாறு சிந்திப்பது மிகக்குறுகிய மனப்பான்மை அல்லவா?**

தாங்கள் இத்தகைய கருத்துடையவர்களாயிருப்பீர்கள் என்றால் தூய திருமறையும் ஒருவிதத்தில் குறுகிய மனப்பான்மை கொண்டுள்ளது என்றுதான் கூற வேண்டும்.

தம்மாலன்றி ஒருவனும் பிதாவாகிய தேவனிடம் வரவியலாது என்று இயேசு கிறிஸ்து கூறினார்:

> *"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6).*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறொரு அஸ்திபாரம் இல்லை என்று திருமறை கூறுகிறது:

> *"போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1 கொரி. 3:11).*

இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் ஒன்று மட்டுமே இரட்சிக்கப்படுவதற்கும், பரலோகம் செல்வதற்கும் வழியாக உள்ளது.

**21. மனிதனின் ஆத்தும இரட்சிப்புக்கு ஒரே வழிதான் என்றும், அது இயேசு கிறிஸ்துவின் மூலமாகத்தான் என்றும் உறுதியாகச் சொல்லுகிறீர்களே? அவரா லேயன்றி வேறொருவராலும், வேறொரு முறையிலும் இந்த இரட்சிப்பை அடைய முடியாதா?**

இல்லை. முடியவே, முடியாது! நாம் முன்பு பார்த்தபடி காணாத, அறிந்துக்கொள்ள முடியாத, மனித சிந்தைக் குள் அடங்காத மெய்யான பரலோக தூய தேவனை அடைய, அந்தப் பரலோகத்திலிருந்து இப்பூமிக்கு இறங்கி வந்துள்ள ஒருவராலேயே அன்றி வேறொருவராலும் சாத்தியமாகாது என்பது உறுதி. அவ்வாறு வந்து, மீண்டும் அந்தப் பரலோகத்திற்கு வெற்றியுடன் ஏறிச்சென்றுள்ள வர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே ஆவர்.

துஷ்டனை நிக்கிரகம் செய்யவும் (அழிக்கவும்), தூயவனைப் பரிபாலனம் செய்யவுமே (பாதுகாத்து பரா மரிக்கவுமே) தேவன் அநேக அவதாரங்களை எடுத்துள் ளார் என்று பொதுவாக நம்பப்படுகிறது. இது தூய தேவன் பாவிகளை அழிக்கவே வேண்டும் என்ற இறைப் பண்பை வலியுறுத்துகிறது.

ஆம். தூய்மையும், நேர்மையுமுள்ள நீதியுள்ள தேவன் பாவத்தைத் தண்டிக்கதான் வேண்டும். இந்த தேவனுடைய நீதியான சட்டத்தைத் தள்ளி வைத்து விட்டு, பாவியாக உள்ள ஒருவனை வெறுமனே மன் னித்து விடுவாரானால், அது அவருடைய நேர்மைக்கும் நீதிக்கும் இழுக்கு உண்டாக்குவதாகும். பாவத்தைத் தண்டியாமல் பாவியை மன்னிக்க முடியாது.

எவ்வாறு ஒரு நியாயாதிபதி சட்டப்படி விதிக்கும் அபராதத்தை, குற்றவாளிக்குப் பதிலாக வேறொருவர் செலுத்தித் தீர்க்கும்போது அச்சட்டம் நிறைவேற்றப்



பட்டு, அக்குற்றவாளி விடுதலையடைகிறானோ அவ் வாறே பாவிக்குரிய தண்டனையைத் தன்மேல் ஏற்றுக் கொள்ளும்படியாகத்தான் தேவனானவர் இயேசு கிறிஸ்து என்ற பெயருடையவராக இவ்வுலகில் மனிதனாக வந்தார். மனிதனுடைய பாவத்திற்கு ஒரு குற்றமற்ற மனிதனே பரிகாரத்தை ஏற்க வேண்டும். “பாவத்தின் சம்பளம் மரணம்” என்ற தேவ நியமனத்தின்படி, மனிதனின் பாவத்தினால் உண்டாகும் விளைவை, இந்த இயேசு கிறிஸ்து, தன்மேல் ஏற்றுக்கொண்டு நமக்குப் பதில் ஆளாக, ஒரு பாவியின் நிலையில், சிலுவை மரத்தில் மரித்துள்ளார்.

“இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை” என்பது, தூய தேவனுடைய நியாயமான, நிலையான வேறொரு பிரமாணம் ஆகும். ஒரு பாவியின் பாவத்தை மிருகங்கள், பறவைகள் இவைகளின் இரத்தம் சுத்தி செய்யாது. அது ஒரு மனிதனின் இரத்தமாகவே இருக்க வேண்டும். அதுவும் குற்றமற்ற தூய இரத்தமாக இருக்க வேண்டும். ஆகவேதான் இறைவன் இவ்வுலகில் இறங்கிவந்தபோது, மற்ற அனைத்துப் பாவ மனிதர்கள் பிறப்பதுபோல் ஒரு தகப்பனுக்கும் தாய்க்கும் பிறவாது, கன்னியாயிருந்த மரியாளிடம் அதிசயமான முறையில் பாவமில்லாதவராக பிறந்தார். ஆகையால் அவர் ஒருவரு டைய தூய திருஇரத்தமே பாவக்கறைகளை நீக்கும் ஒரே பரிகாரமாக, சுத்திகரிக்கும் புண்ணிய இறை தீர்த்தமாக இருக்கிறது. பாவத்தில் வீழ்ந்துபோன மனிதனை மீட்டு, அவனைத் தேவனிடம் ஒப்புரவாக்கிக் கொள்ளும் விலைக் கிரயமாகவே இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். இவ் வாறு பாவத்தை நீக்கி சுத்திகரிக்க இயேசு கிறிஸ்துவால் அன்றி வேறு எவராலும் கூடாது.

மற்றும், இவ்வாறு தமது இரத்தத்தைச் சிந்தி, பாவ பலியான இயேசு கிறிஸ்து தேவனாக உள்ளார் என்று உறுதிப்படுத்தவும், அவருடைய ஈனச் சிலுவைப் பலி மரணம், தூய நீதியுள்ள தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தும் வகையில், மரித்த இயேசு கிறிஸ்து மூன்றாம் நாள் மீண்டும் உயிரோடு எழுந்து, பரலோகம் ஏறிச்சென்றார். இதினிமித்தமாகத்தான், இயேசு கிறிஸ்து ஒருவரே – அவர் ஒருவரே – தேவனை அடையவும், பாவம் போக்கவும், பரலோகம் செல்லவும் ஒரே வழியாக இருக்கிறார் என்று உறுதிபடக் கூறுகிறோம்.

இதினிமித்தமாகவே பரிசுத்தவேதம் இவ்வாறு உறுதியாகக் கூறுகிறது:

> *“தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை (சிலுவை மரத்தில் மரிக்கும்படி) ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே: இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது” (1 தீமோ. 2:5,6).*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக அல்லாமல் வேறு வழியில் இரட்சிக்கப்பட முடியாது என்று திருமறை தெளிவாக வலியுறுத்திக் கூறுகிறது:

> *“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12).*



# II விசுவாசம் என்றால் என்ன?

## 22. விசுவாசம் வைப்பது, அல்லது நம்புவது என்று சொன்னால் அதன் உள்ளான பொருள் என்ன?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே பரலோகம் செல்லுவதற்கு ஒரே வழி; அவரேயன்றி வேறொருவர் இல்லை என்று தாங்கள் அங்கீகரிக்க வேண்டும். இதைத் தாங்கள் மனதார ஒப்புக்கொள்ள வேண்டும். நீங்கள் உங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ள முடியும் என்பதையோ, ஒருவன் இரட்சிப்படுவதில் அவனுக்கு ஏதோ ஒரு பங்கு உண்டு என்று நினைப்பதையோ முற்றும் தள்ளிவிட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் உங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து, அவரையே முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும்.

இதை விளக்க தூய வேதத்தில் அநேக பதங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இரட்சிப்பு ஒருவர் தரும் ஈவை *ஏற்றுக்*கொள்வதற்கு ஒப்பாக உள்ளது. இது ஒரு வாசல் வழியாக *நுழைந்து* செல்லுவதற்கு ஒப்பானது – இயேசு கிறிஸ்துவே அந்த வாசல். ஒருவர் உள்ளே நுழைவதற்கு தமது வாசலைத் *திறப்பதற்கு* ஒப்பாகவும் இது இருக்கிறது. இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் வந்து ஆட்சி செய்ய உங்கள் இருதயத்தை அவருக்குத் திறந்து கொடுக்க வேண்டும்.

இது தண்ணீரைப் *பருகுவதற்கு* ஒப்பாகவும் உள்ளது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஜீவ தண்ணீராக இருக்கிறார். இது கெட்ட குமாரன் மனந்

திரும்பி தன் சொந்த வீட்டுக்குத் *திரும்பி* வருவதற்கு ஒப்பாக இருக்கிறது. பாவிகளாகிய நாம், நம்முடைய சித்தத்தில் ஒரு தீர்மானத்துடன் தேவனிடமாகத் திரும்பி வருகிறோம். இது முழு இருதயம், முழு ஆத்துமா, முழு பலத்தோடு கிறிஸ்துவில் *அன்புகூருவதாகும்*. இது மனந்திரும்பிய நிலையில், ஆண்டவருக்குத் தன்னை முற்றுமாக ஒப்புக்கொடுத்தல் ஆகும். இது *தொடும்* ஒரு செயலுக்கு ஒப்பாகவும் இருக்கிறது. கடும் நோயுற்ற பெண் எவ்வாறு ஆண்டவருடைய ஆடையின் ஓரத்தைத் தொட்டு குணமாக்கப்பட்டாளோ அதுபோல இதுவும் உள்ளது. ஒரு திருமணத்திற்கோ அல்லது ஒரு விருந் திற்கோ வரும்படி கொடுக்கப்படும் *அழைப்பை* ஒருவன் *ஏற்றுக்கொள்வதைப்* போலவே இது உள்ளது. இது ஆண்டவர் அழைக்கும் அழைப்பை ஏற்றுக்கொள்வ தாகும். இது ஒருவரைச் *சார்ந்து* அவரைப் *பின்பற்றுவதற்கு* ஒப்பாகவும் இருக்கிறது. நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக அங்கீகரித்து, முழு இருதயத் துடனும், முழுமனதுடனும் அவரைப் பின்பற்றுவதே இந்த இரட்சிப்பாகும்.

### 23. விசுவாசிப்பது என்று கூறும்போது, அது ஒன்றும் அறியாத இருளில் குதிப்பது போன்று, மடத்தனமாக காணப்படுகிறதில்லையா?

இல்லை! உண்மையில் விசுவாசம் என்பது நிலை யான ஆதாரத்தைச் சார்ந்திருப்பதாகும். அது தேவ வசன மாகிய வேதாகமத்தில் உள்ள அடிப்படைச் சத்தியங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. விண்ணையும், மண்ணை யும், அவைகளின் நிறைவையும், படைத்த ஒன்றான மெய்த் தேவனாகிய பரலோகத் தகப்பனாக விளங்கும், தேவனிடம் வைக்கும் பற்றே இந்த விசுவாசம். அவர் எவ்வாறு நித்திய நித்தியமாக உறுதியாக உள்ளாரோ



அவ்விதமே அவர் மேல் வைக்கும் நம் விசுவாசமும் உறுதியாக நிலைநிற்கும்.

“மூட பக்தி” என்று சொல்லுவது போல், “மூட விசுவாசம்” என்று சொல்லுவது சரியல்ல. நாம் எவரி டத்தில் விசுவாசம் வைக்கிறோம் என்பதே கேள்வி. உண்மையும் சத்தியமுள்ள தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேலேயே நாம் நம்முடைய முழு விசுவாச நம்பிக்கை வைக்கவேண்டும்.

மனித சிந்தைகளுக்கு அப்பாற்பட்டு, அனாதி தேவனின் திருநோக்கத்தின் திட்டங்களை மட்டும் கொண்டுள்ள தேவ வசனத்தைப் போல் உறுதிபடைத் ததாகவும், ஆணி வேராகவும், ஆதாரமுமாக உள்ளது வேறு எதுவும் இல்லை. அவருடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17). அவரிடத்தில் நம்பிக்கை வைப்பது என்பது புத்தி கூர்மையானது. அது பகுத்தறிவுக்குட் பட்டதும், ஒருவன் செய்யக்கூடிய நியாயமானதொன் றாகவும் உள்ளது. சிருஷ்டிக்கப்பட்ட ஒன்று தன் சிருஷ்டி நாயகனைச் சார்ந்து அவர் கரத்தில் சமர்ப்பிப்பதைக் காட்டிலும் நியாயமானது வேறென்ன இருக்க முடியும். படைப்பின் தேவன் நம்மை ஏமாற்ற மாட்டார், நாமும் ஏமாந்து போக மாட்டோம்!

### 24. நான் சரியான விதத்தில் விசுவாசிக்கிறேன் என்று எவ்வாறு சொல்ல முடியும்? எனக்குப் போது மான விசுவாசம் உள்ளதா என்று நான் எவ்வாறு அறிவேன்?

விசுவாசம் என்பது இரட்சகர் அல்ல. இயேசு கிறிஸ்துவே இரட்சகர். உண்மையான விசுவாசம் என்பது அவரைப் பற்றிக்கொள்வதாகும்.

விசுவாசம் என்பது சில உண்மைகளை அறிவினடிப் படையில் ஒத்துக்கொள்வதல்ல. ஆனால் அது ஒரு தனி நபராகிய இயேசு கிறிஸ்துவை, இருதயத்தில், ஆத்து மத்தில் பற்றிப் பிடித்துக்கொள்வதாகும்.

விசுவசத்தை அளந்துப்பார்க்க ஒரு அளவு கோல் கிடையாது. ஆனால் யார்மேல் நம் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வைக்கிறோம் , யார்மேல் நாம் முற்றும் சார்ந்து கொள்ளுகிறோம் என்பதே காரியம்.



## 12 எளிய சுவிசேஷம்

**25. சுவிசேஷம் என்பது மிகவும் எளிமையானதாக இருக்கிறதே! இது கிரயமற்ற, மலிவான ஒன்றாக அல்லவா காணப்படுகிறது?**

ஆம், தேவன் மனிதனுக்கு அருளியுள்ள சுவிசேஷம் மிகவும் எளிமையானதே!

ஒருவன் இரட்சிக்கப்படுவது எளிமையானது. எங்கு முள்ள எல்லாவித மக்களும் எளிதில் பெற்றுக் கொள்ளத் தக்கதாக அது மிகவும் எளிமையானதாகவே இருக்கிறது.

பாவமுள்ள ஒரு மனிதனுக்கு விலைக்கிரயம் இல்லாது இரட்சிப்பு இலவசமாகக் கிடைக்கிறது. பணச் செலவு எதுவும் இன்றி, நற்கிரியை, புண்ணியச் செயல் ஏதுமின்றி இது இலவசமாகக் கிடைக்கிறது.

> *“ஓ! தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள், பணமில்லா தவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங் கள், நீங்கள் வந்து, பணமுமின்றி விலையு மின்றி, திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்” (ஏசாயா 55:1).*

மனிதனின் இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான தண்ணீர், காற்று, சூரிய வெளிச்சம் போன்றவைகளைத் தேவன் இலவசமாக அருளியுள்ளது போல, அவனுடைய ஆத்தும இரட்சிப்புக்கான இறை வழியாகிய இந்த சுவிசேஷமும் இலவசமாகவே அருளப்பட்டிருக்கிறது.

ஆயினும், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இதற்காக *மாபெரும் கிரயத்தைச்* செலுத்தி யிருக்கிறார். இதற்காக அவர் பரலோக மேன்மையைத் துறந்து, இவ்வுலகில் மனிதனாக வர வேண்டியிருந்தது, பாவம் மலிந்துள்ள கொடிய உலகமாகிய இக்கானகத்திற்கு அவர் *இறங்கிவர* வேண்டியதாயிற்று. அவர் சரீரத்திலும், ஆவியிலும், ஆத்துமாவிலும் *பாடுபட்டு*, தம்முடைய விலை யேறப்பெற்ற தூய பாவமற்ற *இரத்தத்தைச் சிந்தி*, ஈனமான கொடும் கொலைக் கருவியாகிய சிலுவையில் தம் *உயிரைக் கொடுத்துள்ளார்*. நமக்குப் பாவ மன்னிப் பைச் சம்பாதித்துக் கொடுக்கும்படி இப்படி அவர் மரிக்க வேண்டியதாயிற்று. நம் பாவங்கள் மன்னிக்கப்பட அவர் தம் திரு இரத்தத்தைச் சிந்தினார்.

> *"நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத் திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்" (1 பேதுரு 2:24).*

**26. இரட்சிக்கப்படுவதற்கு எந்தக் கிரியையும் செய்ய வேண்டுவதில்லை, ஆனால் விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். விசுவாசமும் ஒரு செயல் அல்லவா? நீங்கள் கூறுவது ஒன்றுக்கு ஒன்று முறணாகத் தோன்றுகிறதே?**

இது பார்வைக்கு முறணாகத் தோன்றினாலும் முறண்பாடல்ல. இதன் உண்மையான பொருள் இதுவே:

இரட்சிக்கப்படுவதற்கு நாம் செய்யத்தக்க, செய்ய வேண்டிய நற்கிரியைகள், புண்ணியக் கிரியைகள் எதுவுமே இல்லை. நீதியான எந்தச் செயல்களினாலும் நாம் இரட்சிக்கப்படுவதும் இல்லை. ஜெபம் செய்தல், நோன்



புகள் கடைபிடித்தல், தான தருமங்கள் வழங்குதல், நற்போதனை களைக் கைக்கொள்ளுதல், அவைகளுக்கு உண்மையாக இருத்தல் இவைகளின் மூலம் நாம் இரட்சிக்கப்படுவது மில்லை.

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது பாராட்டுதற்குரிய ஒரு புண்ணியச் செயல் அல்ல. மனிதர்களாகிய நாம் பரலோகத்தைச் சம்பாதிக்கக் கூடுமா? கூடாதே! அவ்வாறு சம்பாதிக்கக்கூடியதாயின் நாம் எவ்வளவாக பெருமை கொள்வோம்!

உண்மையான விசுவாசம் என்பது ஒரு தனி நபருக்குக் கொடுக்கப்படும் தெய்வீக வெளிப்பாடாகும். இது தேவ ஆவியானவர் மனிதனுக்குள் அவனுடைய ஆவியில் நடப்பிக்கும் ஒரு செயல். இந்த விசுவாசம் நம்முடைய இருதயம், சிந்தை இவைகளுக்கு அப்பாற் பட்டு கிரியை செய்வதாயிருப்பினும், இவை இரண்டை யும் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒருவன் தேவன் பேரில் மட்டும் சார்ந்து, அவரையே பற்றிக்கொள்ளத்தக்க இதயப் பக்குவத்தை இந்த விசுவாசம் அவனுக்குள் உருவாக்குகிறது. அது சரீர உணர்ச்சிகளுக்கும், அறிவு, சிந்தை, இவைகளுக்கும் அப்பாற்பட்டது. இத்தகைய விசுவாசத்தை ஆண்டவரே தம் பரிசுத்த ஆவியினால் நமக்குள் உருவாக்குகிறார்.

விசுவாசம் என்பது ஒருவனுடைய இருதயத்தி லிருந்து எழும் இன்பமும், நலமுமான ஒரு உணர்ச்சி யல்ல; அல்லது சிந்தையில் உருவாகும் ஒருவகை குறிப்பிட்ட எண்ணமுமல்ல. மனித உணர்ச்சிகள் விசுவாசத்தை உருவாக்க முடியாது. அவ்விதமான மனித முயற்சிகள் அனைத்தும் மாய்மாலமான கள்ள நம்பிக்கை யாகவே முடியும்.

| 13 | இரட்சிப்புக்குப் பின் |
|---|---|

### 27. நான் இரட்சிக்கப்பட்ட பின்பு அதில் நிலைத்திருந்து, அதைக் காத்துக்கொள்வேன் என்று எவ்வாறு உறுதிப்படுத்திச் சொல்ல முடியும்?

எவ்வாறு நீ உன்னையே இரட்சித்துக்கொள்ள முடியாதோ, அவ்வாறே நீ பெறும் உன் இரட்சிப்பையும் நீயே காத்துக்கொள்ள வேண்டியதில்லை.

இயேசு கிறிஸ்து, நம்மை இரட்சிக்கிறவர் மட்டுமல்ல, நம்முடைய இரட்சிப்பைக் காத்துக்கொள்ளுகிறவரும் அவரே. நம்மிடத்தில் நற்கிரியையை ஆரம்பித்து, அதை அவர் முடிவு பரியந்தம், அதாவது இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் காத்து நிலை நிறுத்துபவராகவும் இருக்கிறார் (பிலி. 1:6; யூதா 24). எவ்வாறு நமக்கு இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொடுத்தாரோ, அவ்வாறே நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பைக் காத்துக்கொள்வதும் இரட்சிப்பைக் கொடுத்தவராலேயே ஆகும்.

### 28. விசுவாசம் மட்டுமே போதும், வேறொன்றும் அவசியம் இல்லை என்றால் நான் என் மனம் போன வழியில் வாழலாம் அல்லவா?

நாம் இரட்சிக்கப்படும்போது, தேவன் நம் மன விருப்பத்தையெல்லாம் மாற்றி விடுகிறார். அப்பொழுது பாவத்தில் ஈடுபடும் நம்முடைய நாட்டமும் மாற்றப்பட்டுப்போம். பாவத்தைத் தூண்டிவிடும் தீவிர ஆசை



நீங்கிப்போம். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குக் காரணமாயிருந்த செயல்களைத் தொடர்ந்து செய்ய நாம் நாட மாட்டோம். தூய்மையான ஒரு வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற வாஞ்சை அப்பொழுது உண்டாகும். மறு பிறப்படையும்போது நாம் பெற்றுக்கொள்ளும் பரிசுத்த தேவ ஆவியானவர் ஒரு புதிய நாட்டத்தையும், புதிய சிந்தையையும் கொடுக்கிறார்.

> *“ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2 கொரி. 5:17).*

என்று வேதாகமம் இந்நிலையை எடுத்துரைக்கிறது.

### 29. நான் இரட்சிக்கப்பட்ட பின்னர் பாவம் செய்வேனானால், நான் பெற்றுள்ள இரட்சிப்பை இழந்து விடுவேனா?

என்னுடைய ஆடுகளில் ஒன்றும் (அதாவது இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும்) கெட்டுப் (அழிந்து) போவதில்லை என்று ஆண்டவராகிய இயேசு தாமே கூறியிருக்கிறார்.

> *“நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை” (யோவான் 10;27-29).*

அவர் மீண்டும் வரும் நாளில் கர்த்தரால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் மகிமைப்படுத்தப்படுவார்கள் (ரோமர் 8:30). இரட்சிப்பு என்பது ஒரு புதிய பிறப்பாகும்

(யோவான் 3:3,5); பிறத்தல் என்பது முடிவு பெற்ற ஒரு நிலை. அதை மாற்ற முடியாது.

இரட்சிக்கப்பட்ட நிலை என்பது நித்தியமான, முடிவில்லாத வாழ்வாகும் (யோவான் 3:16, 36). நித்தியம் என்பது ஒரு முடிவுக்கும், அழிவுக்கும் உட்படாதது ஆகும். எவ்வித சக்தியும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிக்க இயலாது (ரோமர் 8:38,39 காண்க).

**30. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனைப் பற்றி எனக்குத் தெரியும், அவன் பாவத்தில் விழுந்து பின்வாங்கிப் போனான். இதைப் பற்றித் தாங்கள் என்ன சொல்லுவீர்கள்?**

அவன் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டவனானால் அவன் கெட்டுப்போக மாட்டான். ஆனால் அவன் மாய்மாலம் பண்ணின ஒருவனாக இருந்திருப்பான்; அவன் ஒரு சன்மார்க்க சீர்திருத்தத்தை நாடினவனாகவோ, நல்வாழ்வு செய்யும்படியான ஒரு தீர்மானத்தை எடுத்தவனாகவோ இருந்திருப்பான். அவன் ஒரு நல்ல தீர்மானம் எடுத்துப்பின் அதில் தோற்றுப்போய் பழைய பாவ வழிக்குத் திரும்பினவனாக இருக்கலாம்.

நம்முடைய போதனை மனித அனுபவத்தின் அடிப்படையிலோ அல்லது அறிவின் அடிப்படையிலோ அமையக்கூடாது. அது தேவனால் அருளப்பட்ட தேவ வசனத்தையே அடிப்படையாகக் கொண்டு, அவ்வசனத்தில் உறுதி கொண்டிருக்க வேண்டும்.

“தூய திருமறை என்ன சொல்லுகிறது?” என்பதே போதகத்தின் அடித்தளமாக அமைய வேண்டும்.



**31. ஒருவன் இரட்சிக்கப்படும்போது, அவன் பாவ மன்னிப்பைப் பெறுகிறான் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் அவன் இரட்சிக்கப்பட்ட பின்னர் செய்யும் பாவங்கள் என்னவாகும்?**

ஒருவன் இரட்சிக்கப்படும்போது, அவனுடைய அனைத்துப் பாவங்களுக்கென்று பெறவிருக்கும் தேவ தண்டனையிலிருந்து அவன் மன்னிக்கப்படுகிறான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தாம் மரிக்கும்போது, நம்முடைய அனைத்துப் பாவங்களுக்காகவும், கடந்த – நிகழ்கால – வருங்கால பாவங்கள் அனைத்திற்காகவுமே அவர் மரித்தார். ஆண்டவர் சிலுவையில் மரித்தபோது நம் பாவங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் நடைபெறுபவைகளாகவே இருந்தன. அவைகள் யாவற்றிற்காகவுமே அவர் மரித்தார். இப்பொழுது நியாதிபதியாகிய தேவன், விசுவாசிக்கிறவனின் வாழ்வில் நித்திய மரணத்திற்கென்று தண்டிக்கத்தக்க எப்பாவத்தையும் காண்கிறதில்லை. ஏனெனில் இயேசு கிறிஸ்து அதற்குரிய தண்டனையனைத்தையும் கல்வாரி சிலுவை மரத்தில் தூக்கிச் சுமந்து தீர்த்து விட்டார்.

*“ஆனபடியால், இயேசு கிறிஸ்துவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை” (ரோமர் 8:1).*

ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின்பு செய்யத்தக்க பாவங்களுக்குப் பலவித எதிர் விளைவுகள் உண்டு.

அவைகள் தேவனோடு அவனுக்குள்ள ஐக்கியத்தை முறித்துவிடுகின்றன. அந்தப்பாவத்தை அறிக்கை செய்து கைவிடும்வரை முறிந்துபோன அந்த, ஐக்கியமற்ற நிலையே நீடிக்கும். எனினும், *ஐக்கியம்* முறியுமேயொழிய, *உறவு* முறியாது. ஐக்கியம் என்பது ஒரு மெல்

லிய நூல், ஆனால் உறவோ முறிக்கக்கூடாத ஒரு சங்கிலியாகும்.

அப்படிப்பட்ட பாவங்கள் உடன் விசுவாசிகளுக் கிடையில் உள்ள ஐக்கியத்தையும் முறித்துவிடும்.

அவை நம் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காதபடி தடையாக நிற்கும்.

அவை நாம் ஆண்டவருக்குச் செய்யும் சேவையைக் கனி கொடாதபடியாக்கி விடும். சில சமயங்களில் இறைச் சேவையில் ஈடுபடவும் தடையாகிவிடும். அவை நம்முடைய ஆவிக்குரிய உரிமையைப் பறித்து விடும்.

அவை கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு அப கீர்த்தியையும் நிந்தையையும் கொண்டு வருகின்றன.

அவை நம் சந்தோஷத்தை இழந்துபோகும்படி செய்து விடுகின்றன.

அவை நாம் பெற்றிருக்கும் இரட்சிப்பைப் பற்றி சந்தேகிக்கும்படி செய்துவிடும். இரட்சிப்பின் உறுதி இரட்சிக்கப்பட்ட நிலையில் வாழ்வதேயாகும்.

அவை ஆவிக்குரிய வளர்ச்சியைக் குலைத்துப் போடுகின்றன.

அவை தேவனுடைய சிட்சையைக் கொண்டு வருகின்றன.

இரட்சிக்கப்படாத ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, நித்திய தேவ னுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பி மன்னிப்பைப் பெரு கிறான். இது அவன் என்றென்றுமாகப் பெறும் நித்திய மன்னிப்பாகும்.



மாறாக இரட்சிக்கப்பட்ட ஒருவன், தன் பாவத்தை அறிக்கை செய்யும்போது, பெற்றோர்கள் மன்னிக்கிற வண்ணமாக பிதாவாகிய தேவனின் மன்னிப்பைப் பெறு கிறான். இது நாம் இச்சரீரத்தில் குடியிருக்கும் காலம் வரை அவசியமான தேவ தயவாகும்.

**32. ஒருவன் இரட்சிக்கப்பட்டப் பின்னர் நடப்பிக்கும் பாவத்தை அறிக்கை செய்யாது மரிப்பானேயானால் என்னவாகும்?**

மேலே விவரிக்கப்பட்டுள்ளதுபோல் அப்படிப்பட்ட பாவங்களுக்கான பரிகாரம் ஏற்கனவே நிறைவேறி முடிந்தாயிற்று. தேவன் ஒரு பாவத்திற்கு இரண்டு பரி காரங்களைக் கேட்கமாட்டார். ஆகையால் இப்படிப்பட்ட ஒருவனுடைய இரட்சிப்பை என்றும் மாற்றமுடியாது. அது உறுதியுடன் என்றும் நிலைத்திருக்கிறது.

பாவத்தினால் முறிந்துபோயுள்ள ஐக்கியம் அல்லது தொடர்பு, ஆண்டவருடைய சந்நிதியில் செல்லும்போது சரி செய்யப்படும் (சங்கீதம் 51:9,10). அவ்வாறு அறிக்கை செய்யப்படாத பாவங்களினிமித்தம் நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் நிற்கும்போது பெறக் கூடிய வெகுமதிகளை இழக்க வேண்டியதாகும்.

## 14 இரட்சிப்பை அறிதல்

**33. ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அவன் உணர்ச்சிவசப்பட்ட ஒரு அனுபவத்தைப் பெறுவானா?**

சிலருக்கு அத்தகைய அனுபவங்கள் ஏற்படலாம்; மற்றும் சிலருக்கு உணர்ச்சிவசப்படத்தக்கதொன்றும் நடைபெறாதிருக்கலாம். அதிக கொடூரமான, ஆழமான பாவ வாழ்க்கையுடையோர் இரட்சிக்கப்பட்டு விடுதலை யடையும்போது, ஒருவேளை இத்தகைய உணர்ச்சி வசப் படத்தக்க அனுபவங்களைப் பெறக்கூடும். வெறு சிலருக்குத் தெய்வீக ஈவை பெறுதல் அமைதியாக எவ் வித உணர்ச்சிகளுமின்றி பெறும் ஒரு அனுபவமாகவே அமையும். இரட்சிக்கப்படும்போது உணர்ச்சிவசப்பட வேண்டுமென்ற அவசியம் இல்லை. சில வேளைகளில் அத்தகைய அனுபவங்கள் வெகுநாட்கள் கழித்துப் பெறக்கூடியதாகவும் இருக்கலாம்.

**34. ஒருவன் இரட்சிக்கப்பட்டிருப்பதை எவ்வாறு தெரிந்து கொள்ளுவான்?**

ஒருவன் இரட்சிக்கப்பட்டிருப்பதை வேத வசன ஆதாரத்தில்தானே அவன் அறிந்து கொள்ளுகிறான். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள், இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும்படியாகவே தேவவசனம் நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது (1 யோவான் 5:13). இதற்கு கீழ்க்கண்ட சில ஆதாரங்களும் உள்ளன:



ஆண்டவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்கிற ஒரு விருப்பம்.

பிற கிறிஸ்தவ விசுவாசிகளிடம் உண்டாகும் ஒரு பரஸ்பர அன்பு.

பரிசுத்தத்தைப் பற்றிய நாட்டம்.

பாவத்தை வெறுக்கும் தன்மை.

தேவ வசனத்தின்மேல் பிரியம்.

ஜெபத்தின் மேல் வாஞ்சை.

தேவ நடத்துதல் பற்றின ஒரு உணர்வு.

விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருத்தல்.

விசுவாசிக்கிறவனிடத்தில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியின் சாட்சி.

சுவிசேஷச் செய்தியை மற்றவர்களுடன் பகிர வேண்டும் என்ற ஆர்வம்.

## 15 இரட்சிப்பைப் பற்றின ஐயங்கள்

**35. ஒருவன் கிறிஸ்துவண்டை வருமுன் அவன் தன் வாழ்க்கையைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டியது அவசியமா?**

சுவிசேஷம் என்பது அதுவல்ல. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு சுய முயற்சி செய்கிறானோ, அவ்வளவுக் கவ்வளவு அவன் படுதோல்வியையே கண்டடைவான்.

ஒருவனுக்குத் தேவையாயிருப்பது படிப்படியாக மாற்றம் அடைகிற ஒரு சீர்திருத்தமல்ல. மாறாக, முற்றிலும் புதியதான ஒரு பிறப்பே அவனுக்கு அவசியம். கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் தன் செயல்களைச் சீர்ப்படுத்திக்கொள்ளக் கூடாதவனாக இருந்தான். ஆயினும் அவன் இரட்சிக்கப்பட்டான். இவ் வாறே எல்லா மனிதரும் உள்ளனர்.

இவ்வாறு தன் செயல்களைச் சீர்ப்படுத்திக்கொள்ள விரும்பின ஒரு மனிதனைப்பற்றி ஆண்டவர் எடுத்துக் கூறினார். அவனுடைய வீடு சுத்திகரிக்கப்பட்டு காலி யாக இருதது. ஆயினும் அவன் இரட்சகரை தன் வீட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தகையவனுடைய பிந்தின வாழ்க்கை, முந்தியதைவிட அதிகக்கேடுள்ளதாக போயிற்று. (மத்தேயு 12:43-45)

**36. நான் இரட்சிக்கப்பட்டுள்ளேன் என்று ஒருவன் கூறிக் கொள்வது, அவன் தன்னையே உயர்த்திக் கொள்ளும் ஒரு காரியமல்லவா?**



ஆத்தும இரட்சிப்பு, அல்லது ஆன்மீக விடுதலை என்பது ஒருவனுடைய சுய நீதியினாலும், கிரியைகளி னாலும், முயற்சியினாலும், தகுதியினாலும் உண்டாகக் கூடியதொன்றானால், அப்பொழுது அது மெய்யாகவே புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் ஏற்ற ஒன்றாக அமையும். ஆனால் மெய்யான ஒரு விசுவாசி, “நான் இரட்சிக்கப் பட்டுள்ளேன்” என்று சொல்லுவானானால், அது பெரு மைக்குரியதொன்றல்ல. ஒருவகையில் அவன், “நான் எல்லா பாவங்களையும் செய்தவனாயிருக்க, கிறிஸ்துவே என்னை முற்றும் முடிய இரட்சித்திருக்கிறார்” எனக் கூறுவதாகவே அமையும். இரட்சிக்கப்படுதலின் தகுதி யும், அதின் செயலாக்கம் முழுவதும், அதைப் பெற்று அனுபவக்கிறவனுடையதாயிராமல், முற்றிலும் தேவனு டைய தயவையும் கிருபையையுமே சார்ந்ததாக உள்ளது. ஆகையால் அவன் பெருமைப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தேவனடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வைப்பற்றின சாட்சியை விசுவாசியாது, அவரைப் பொய்யராக்குவதே (1 யோவான் 5:10), பெருமைக்குரிய பெரியதொரு பாவமாக அமையும்.

**37. கிறிஸ்துவைப் பின்பற்றுவதும், கிறிஸ்தவமுமே மெய்யானதாக இருக்குமானால், அதுவே சத்திய மானால், பிறகு ஏன் அவர்கள் சிறுபான்மையராகவே உள்ளனர்?**

இக்கேள்வி, ஒரு வகையில் பெரும்பான்மையோரின் கருத்தே சரியானது என்ற பொதுவான எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. இது உண்மையல்ல. வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில், மக்களின் பாவத்தின் நிமித்தமாக பெரும் ஜலப்பிரளயத்தை அனுப்பி தேவன் இவ்வுலகை அழித்த காலத்தில், நோவா என்ற பக்திமானின் குடும்

பத்தில் உள்ள எட்டு நபர்கள் மட்டுமே, உண்மையை அறிந்து அதின்படி செயல்பட்டவர்களாயிருந்தனர். மற்ற அனைத்து உலக மக்களும், தேவ எச்சரிப்பைத் தவறாகக் கணித்து, பெருவெள்ளத்தில் அமிழ்ந்து, அழிந்து பெரு நாசமடைந்தனர்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி மலையில் சிலுவையில் அறையப்பட்டபோது, பெரும்பான்மையரான அன்றைய மக்களின் சிந்தை பெரும் தவறுடையதாகவே இருந்தது. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றின, மிகவும் பயந்த நிலையிலிருந்த ஒரு சிறுபான்மையோரின் கருத்தே சரியானதாயிருந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுவதைக் கவனமாக படியுங்கள்.

> *"இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; இதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்" (மத்தேயு 7:13,14).*

**38. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகில் உள்ள எல்லா மனிதர்களுக்காகவுமே மரித்தார் என்று கூறுகிறீர்கள். அப்படியானால், ஏன் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படாமல் இருக்கிறார்கள்?**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் எக்காலத்திலும் உள்ள அனைத்து உலக மக்களின் பாவங்கள் எல்லாவற்றையும் சுத்திகரிக்கப் போதுமானதாயுள்ளது.

ஆயினும், ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது மட்டுமே அது



அவன் வாழ்க்கையில் அனுபவமாகிறது. விசுவாசிக்கிறவன் மேல் மட்டுமே அது பலிக்கிறது (ரோமர்3:22), அல்லது அவன் அதின் பயனை அடைகிறான். தேவதயவை நாம் விசுவாசத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவனுடைய சித்தத்திற்கு மாறாக, எதேட்சையாக தேவன் அவனை இரட்சிப்பதில்லை. தேவன் மனிதனுக்குக் கொடுத்துள்ள சுயாதீனத்தைப் பிடுங்கிக் கொள்வதில்லை. சுயசித்தமுடன் விருப்பமில்லாத மக்களைக் கொண்டு தேவன் பரலோகத்தை நிரப்ப முற்படுவதில்லை.

16 | தேவன் அன்புள்ளவரல்லவா?

**39. தேவன் சர்வ வல்லமையுடையவராக இருப்பாரே யானால், ஏன் உலகில் போர்களும், வன்முறைகளும், துக்கங்களும் நிறைந்திருக்கின்றன?**

இவையாவும் முதல் மனிதனின் பாவத்தினால் உலகில் ஏற்பட்ட பின்விளைவுகளாகும். தேவன் தீமை யையும், கொடூரங்களையும் உருவாக்குகிறவர் அல்ல. வியாதிகள், துக்கங்கள், மரணம், இவைகள் யாவும் பிசாசினால் உண்டானவைகளாகும்.

தேவன் அதை இப்பொழுது அனுமதித்திருக்கிறார். ஆயினும், தம்முடைய அனாதி மகிமையினால், மனித னுடைய நன்மைக்காக அவைகளை வென்று மேற் கொண்டு, தம்முடைய தீர்மானங்களையும் திட்டங்களை யும் அந்தந்த காலக்கட்டத்தில் நிறைவேற்றி வருகிறார்.

**40. தேவன் மிகவும் அன்புள்ளவரும், கரிசனை யுள்ளவருமாக இருப்பாரேயானால், மனிதர்களை நரகத்திற்கு அனுப்புவது சரியாகுமா?**

முதலில் நாம் அறிய வேண்டியது யாதெனில், மனிதர்களுக்காக தேவன் நரகத்தை உண்டாக்கி வைக்க வில்லை என்பதே. அது பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்கென்றுமே படைக்கப்பட்டது. எந்த ஒரு மனிதனும் நரகத்திற்குச் செல்லுவதைத் தேவன் சற் றேனும் விரும்புவதில்லை. அத்தகைய ஒன்று நிகழா திருப்பதற்காகவே, நீதியும் நேர்மையுமுள்ள தேவன் தன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பாடுபடவும், சிலுவை



யில் மரிக்கவும் இவ்வுலகத்திற்கு அனுப்பினார். இவ் விதமாக மனிதன் நரகத்திற்குச் செல்லாது தப்பித்துக் கொள்ளும் பொருட்டாக அவரே அருமையான வழியை யும் உருவாக்கியுள்ளார். தேவன்தாமே உண்டு பண்ணி யுள்ள இரட்சிப்பின் மார்க்கத்தை மறுத்து, வேண்டா மென்று தள்ளிவிட்டால், செய்யக்கூடிய மாற்று வழிதான் என்ன? உண்மையாகவே இலவசமாக தேவன் அருளும் இவ்வளவு பெரியதான நித்திய இரட்சிப்பை வேண்டா மென்று மறுத்துத்தள்ளி விட்டு அக்கறையற்றிருப் பவர்கள், தாமாகவே நரகத்தைத் தேடிக்கொள்ளுகி றார்கள்.

## 17 சில தடைகள்

**41. கிறிஸ்தவ மக்களிடையே பலர் மாய்மாலக்காரர் களாயிருப்பது எனக்கு வேதனையைக் கொடுத்து, சந்தேகத்தை எழுப்புகிறதே?**

பெயர் அளவில், பாரம்பரியமாக இருக்கும் கிறிஸ்தவர்களுக்கும், மெய்யாக இரட்சிக்கப்பட்டு விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கும் இடையே பெரிய வித்தியாசமுண்டு. தாங்கள் கிறிஸ்தவர்களென்று தங்கள் வாழ்க்கையில் பிரதிபலித்துக்காட்டாத அநேக பெயர்க் கிறிஸ்தவர்கள், சமுதாயக் கிறிஸ்தவர்கள் உள்ளனர். சமுதாய கட்சிகளிடையே, தேச நலனை நாடாது ஏமாற்றும் மாய்மாலக் காரர்கள் அநேகர் உண்டு. ஆயினும் மக்கள் தேர்தலில் ஓட்டுப்போடாதிருப்பதில்லை. விளையாட்டுப் போட்டிகளில் உண்மையற்றவர்கள் உண்டு. ஆயினும் விளையாட்டுப் பந்தயத்தை, மக்கள் காணாதிருப்பதில்லை. சினிமாக்களிலும் கலையரங்குகளிலும் உண்மையற்ற கலைஞர்கள் உண்டு. ஆயினும் மக்கள் தங்கள் பொழுது போக்குக்காக அவர்களைக் காணதிருப்பதில்லை. பணப் புழக்கத்தில் கள்ள நோட்டுகளும் நாணயங்களும் இல்லாதிருப்பதில்லை. ஆயினும் மனிதர்கள் எனக்கு நாணயங்களும் நோட்டுகளும் வேண்டாம் என்று சொல்வதில்லை. மதிப்பும், உண்மையுமுள்ளவைகளுக்கே போலியும், மாய்மாலமுமானவைகள் பல பெருகி இருக்கின்றன.

ஆகையால் இரட்சிக்கப் பட்டவர்களிடையே மாய்மாலமும் ஏமாற்றுக்காரர்களும் இருப்பது, நாம் இந்த



மெய்யான, மதிப்புள்ள இரட்சிப்பைப் பெறாதிருப்பதற்கு ஒரு போதும் காரணமாக அமையக்கூடாது.

ஒருவன் கிறிஸ்தவர்களின் நடத்தையைப் பார்த்து விசுவாசம் வைக்கவேண்டும் என்று தேவன் கூறுகிறதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவரையே நம்பிச் சார்ந்திருக்க வேண்டுமென்றே அவர் கூறுகிறார். ஆகையால் தாங்களும் ஒரு உண்மையான, மாயமற்ற கிறிஸ்தவனாக மாறி, ஒரு மெய்க்கிறிஸ்தவனுடைய சாட்சியை இவ்வுலகில் மெய்ப்பித்துக் காட்டுங்கள்.

**42. நான் இயேசு கிறிஸ்துவில் விசுவாசிப்பதற்கு ஒரு தடை உண்டு. ஏனெனில் கிறிஸ்தவ சபைகள் எப்பொழுதும் தங்கள் அங்கத்தினரிடமிருந்து எதிர்ப் பார்ப்பதெல்லாம் பணம்தான்.**

சிலர் மெய்க் கிறிஸ்தவராக ஆவதற்கு, இது ஒரு தடையாக உள்ளது உண்மையே. ஆனால் இது ஒரு நியாயமான காரணமல்ல. சில கிறிஸ்தவ சபைகளும், நிறுவனங்களும் பத்திரிக்கைகள், கடிதங்கள், ரேடியோ, தொலைக்காட்சி மூலமாகப் பணம் சேர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இது மெய்யானக் கிறிஸ்தவ விசுவாசத்தின் சரியான வெளிப்பாடு அல்ல. தேவனுக்கு உங்கள் பணம் அவசியமில்ல. அவருடைய முழு நம்பிக்கைக்குப் பாத்திரவானாக நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா என்பதையே, அவர் உங்களிடமிருந்து நாடுகிறார். தேவன் உங்களிடமிருந்து எதிர் பார்ப்பது உங்களது பணத்தை அல்ல, உண்மையான இருதயத்தையே அவர் எதிர்பார்க்கிறார்.

## 18 இரட்சிக்கப்பட்ட பின்

**43. நான் இரட்சிக்கப்பட்டால், ஞானஸ்நானத்தில் சாட்சி கொடுக்க வேண்டுமா?**

நீங்கள் மெய்யாக இரட்சிக்கப்பட்டு இருப்பீர்களானால், ஞானஸ்நானத்தில் சாட்சிக்கொடுக்க நீங்களாகவே விரும்பி முன்வருவீர்கள். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் எடுப்பது ஒரு நிபந்தனை அல்ல. ஆயினும் ஆண்டவருக்குக் கீழ்ப்படிய இது அவசியமான முதல் படியாக உள்ளது. ஆண்டவர் இயேசுவே இதைக் கட்டளையிட்டிருப்பதினால் (மத்தேயு 28:19), இது முக்கியத்துவம் பெருகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள தனது விசுவாசத்தைக் குறித்து ஒருவன் இவ்வுலகத்திற்குச் சாட்சி பகர்வதற்கு, ஞானஸ்நானமே முதல் படியாக உள்ளது.

ஒருவன் நான் ஞானஸ்நானம் எடுக்கமாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பானேயாகில், அவனுடைய மறு பிறப்பாகிய இரட்சிப்பின் அனுபவம் உண்மையானது தானா? என்ற ஒரு சந்தேகம் எழும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்து இரட்சிக்கப்பட்டிருந்தும், ஞானஸ்நானம் எடுக்காதிருக்கிறவர்கள் எப்போதும் என்றென்றும் ஞானஸ்நானம் எடுக்காதவர்களாகவே இருந்து விடுவர்.

**44. நான் இரட்சிக்கப்பட்ட பின்பு, நான் இதுவரை வளர்க்கப்பட்டு வந்த நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் கைவிட்டுவிட வேண்டுமா?**



நீங்கள் இதுவரை கொண்டிருக்கிற விசுவாசமும், நம்பிக்கையும், பழக்கங்களும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுப்பதாயிருக்குமானால், அல்லது ஆன்மீக இரட்சிப்பு கிரியைகளினால் பெறக் கூடியது என்று போதிக்குமானால், அல்லது இரட்சிப்பு கிரியையும் விசுவாசமும் சேர்ந்து பெறக்கூடியது என்று சொல்லுமானால் அல்லது விக்கிரக ஆராதனையை கடைப் பிடிக்கும் ஒரு நம்பிக்கையாக அது இருக்குமானால், அல்லது திருமறை தேவனுடைய வார்த்தை அல்ல என்ற கருத்துடையதாக இருக்குமானால், அல்லது தேவ வெளிப் பாடுகளைக் கொடுக்கும் பல புத்தகங்களில் தூய திரு மறையும் ஒன்று என்று கூறுவதாக அமையுமானால், தாங்கள் அவசியம் இதுவரை கொண்டிருந்த வழி முறைகளையும், நம்பிக்கையையும் முற்றுமாக துறந்து விட வேண்டும்.

ஆம், அவைகளைத் தாங்கள் அவசியம் விட்டு விடத்தான் வேண்டும். இது உங்கள் குடும்பத்தாருக்கும் சமுதாயத்தாருக்கும் இடையூறு உண்டாக்குவதாக இருப்பினும், பிரச்சனைகளை உருவாக்கக்கூடியதாக இருப்பினும், உபத்திரவங்களை வருவிப்பினும், அவைகளை முற்றுமாகக் கைவிட்டு விலக வேண்டும்.

> *"பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே" (மத்தேயு 10:34-36).*

என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். சில வேளைகளில் மனம்திரும்பி கிறிஸ்துவினிடம் வருதல், தன் சொந்த வீட்டாரிடம் இருந்து விசுவாசியைப் பிரித்து வைக்கிறது.

ஆயினும், நீங்கள் மனம் தளர்ந்து போக வேண்டிய தில்லை. தன் குடும்பத்தாருக்கு முன்பாகக் குணப்பட்ட நிலையில், குறைவற்ற சாட்சியுள்ள மாதிரியான வாழ்க் கையை வாழ்ந்து காட்டும்போது, அவர்களும் கிறிஸ்து விடம் ஈர்க்கப்படுவதற்குக் காரணமாக அமையும். அல்லது, எதிர்ப்புகள் குறையும். இதுவே நாங்கள் கண்டுள்ள எங்கள் அனுபவமாகும்.

ஒரு விசுவாசியின் உத்திரவாதம், பின் விளைவு களைப் பொருட்படுத்தாது, அவன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே ஆகும். இத்தகைய கீழ்ப்படிதலுக்கு தேவன் ஏற்ற வேளையில், ஏற்ற வெகுமதிகளைக் கொடுப்பார்.



# 19 தயக்கம் வேண்டாம்

**45. நான் இயேசு கிறிஸ்துவை நம்ப வேண்டும் என உணர்த்தப்படுகிறேன். ஆனாலும் எனக்குள் ஒரு பயம் குடிகொண்டிருக்கிறது. இதன் காரணம் என்ன என்று உங்களால் சொல்ல முடியுமா?**

இதன் காரணம் கீழ்க்கண்டவைகளில் ஒன்றாக இருக்கக்கூடும்.

அது உங்கள் பெருமையாக இருக்கலாம்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து தாங்கள் வெட்கம் கொண்டவராக இருக்கலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பதிலாகவும், பரிசுத்த வாழ்க்கைக்குப் பதிலாகவும், பாவ சிற்றின்பத்தில் செல்லுவதையே தாங்கள் விரும்புவதாக இருக்கலாம்.

கிறிஸ்தவ விசுவாசி அல்லாத ஒருவரை தாங்கள் நேசிப்பதாக இருக்கலாம். அல்லது குடும்ப, சமுதாய பயமாக இருக்கலாம். உங்கள் பெற்றோர், இனத்தார் என்ன சொல்லுவார்களோ என்ற பயமாகவும் இருக்கலாம்.

**46. நான் ஒரு கிறிஸ்தவ விசுவாசியாவதற்கு அதிக மான விலைகிரயம் கொடுக்க வேண்டும் போல் தோன்றுகிறது. இக்கிரயம் மிக அதிகமாயுள்ளதே?**

அது சரியே, மாறாக கிறிஸ்துவை விசுவாசிக்கா விட்டால் நீங்கள் அடையப்போகும் நஷ்டம் நித்தியமான ஆன்ம அழிவாகும். அதனால் ஏற்படும் இழப்பு எவ்வளவு பெரியது என்பதைத் தாங்கள் கணக்கிட்டிருக்கிறீர்களா? அதன் கிரயத்தைக் கணக்கிட்டுப் பார்த்திருக்கிறீர்களா?

## 20 காலம் கடத்த வேண்டாம்

**47. இந்தத் தீர்மானத்தை நான் இப்பொழுது எடுக்காது பின்னர் எடுப்பதாக இருந்தால், அது சரிதானே?**

தாங்கள் இரண்டு உண்மைகளை மறந்துவிட்டீர்கள். ஒன்று, உங்கள் வாழ்க்கையின் நிலையற்ற தன்மை. மற்றொன்று, ஆண்டவர் இயேசு கிறிஸ்து எச்சணத்திலும் சடுதியாக மீண்டும் வந்துவிடுவார் என்பது. உங்கள் வாழ்க்கை முடியும் முன்னரும், ஆண்டவர் இயேசு கிறிஸ்து மீண்டும் வருமுன்னரும், இத்தீர்மானத்தைச் செய்ய வேண்டுமானால் நீங்கள் காலம் தள்ளிப்போடுவது பெருத்த ஏமாற்றத்தைக் கொண்டு வருமே.

**48. ஒருவேளை நான் விபத்திலோ, வேறு வகையிலோ அகால மரணம் அடையக்கூடும், என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் ஆண்டவருடைய வருகை யைப் பற்றிய உண்மை என்ன?**

தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வருவேன் என வாக்கு அருளியிருக்கிறார். அவர் வரும் வேளையை ஒருவரும் அறியார்கள். அது ஒருவேளை இன்று, இப்பொழுதாகவும் இருக்கலாம். அவர் அதிசீக்கிரமாக வருவார் என்பதற்கு அநேக அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்த சுவிசேஷத்தைக் கேட்ட பின்னரும், அதை விசுவாசியாதிருப்பவர்களுக்கு இரட்சிக்கப்படும் படியான ஒரு வாய்ப்பு பின்பு



கிட்டாதே போகும். ஆண்டவர் வந்து, தம்மை விசுவாசிப்பவர்களைத் தம்மிடம் சேர்த்துக் கொண்ட பின்னர், இவ்வுலகில் சொல்லி முடியாத உபத்திரவங்கள் உண்டாகும்.

**49. இவ்வுலகத்தின் இறுதிக் காலத்தைப் பற்றி கூறுகிறீர்களா?**

இல்லை, இவ்வுலகம் அழிவதற்கு முன்னர் அநேக காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கிறது. முதலாவதாக, முன்னர் சொல்லியபடி ஆண்டவர் இயேசு மீண்டும் வரும்போது, அவருடைய விசுவாசிகள் அடங்கிய தம்முடைய திருச்சபை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அதன் பின்னர் இவ்வுலகத்தில் மகா கொடிய உபத்திரவ காலம் ஒன்று வரும். அதன் முடிவிலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் இறங்கி வந்து இவ்வுலகை 1000 ஆண்டு காலம் நீதியான ஆட்சி செய்வார். அதன் முடிவிலே, நாம் அறிந்திருக்கிற இந்த உலகத்திற்கு ஒரு முடிவு உண்டாகும். அது நெருப்பினால் அழிக்கப்படும். பின்னர் முடிவில்லா ஒரு மகிமையான நித்திய நிலை உண்டாகும். அப்பொழுது புதிய வானமும், புதிய பூமியும் உண்டாகும்.

## உ | இரத்தினச் சுருக்கம்

**50. இது எல்லாம் சரிதான். மீண்டும் ஒருமுறை இந்த இரட்சிப்பைப் பற்றி, ஆன்மீக மீட்பைப் பற்றி எவ்வளவு எளிதாக, தெளிவாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு எளிதாக எடுத்துக் கூற முடியுமா? அதன் உறுதியை நான் எவ்வாறு பெற முடியுமென்றும் சொல்ல முடியுமா?**

முதலாவது, நீங்கள் தூய நீதியுள்ள தேவனுக்கு முன்பாகப் பாவியும், அக்கிரமக் காரனுமாயிருக்கிறீர்கள் என உணர்ந்து, அதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் விளைவாக நித்திய மரணமாகிய தேவதீர்ப்பின் தண்டனைக்கு நீங்கள் பாத்திரராக இருக்கிறீர்கள் என்பதையும் உணர வேண்டும். அதுமாத்திரமல்ல, நீங்கள் சுயமாக, உங்கள் சுயமுயற்சியினால் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தையும் முற்றிலும் அகற்றிவிட வேண்டும். எவ்வித நற்குணங்களினாலும், நல்ல கிரியை களினாலும், சீர்திருத்தங்களினாலும் இந்த நித்திய இரட்சிப்பை மனிதன் ஒருபோதும் அடைய முடியாது.

அடுத்ததாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீங்கள் பெற வேண்டியதான உங்கள் பாவத்திற்கு ஈடான கொடிய தண்டனை அனைத்தையும் தன்மேல் ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பதில் ஆளாக, மரித்தார் என்பதை மனதாற ஏற்றுக்கொண்டு நம்ப வேண்டும்.



கடைசியாக, விசுவாசத்தினால் உங்களுடைய ஆண்டவரும், இரட்சகருமாக அவர் ஒருவரே இருக்கிறார் என்பதையும், பரலோகம் அடைவதற்கு அவர் ஒருவரே வழியாக இருக்கிறார் என்றும் நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதை உங்கள் உள்ளான இருதயத்துடனும், மனப் பூர்வமாக உண்மையுடனும் நிறைவேற்றும்போது, வேதாக மத்தில் கூறப்பட்டுள்ள இறை வசன உறுதியின் அடிப் படையில், உங்கள் பாவம் மன்னிக்கப்பட்டு நித்திய வாழ் வைப் பெற்றிருக்கிறீர்கள் என்ற உறுதியைப் பெற முடியும்.

இதோ தேவனுடைய வாக்கை மீண்டும் கேளுங்கள்.

> *“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசு கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” (யோவான் 3:16).*

இச்சத்தியத்தை மனதார ஏற்றுக்கொண்டு, ஆண்டவர் இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கும் போது, நீங்கள் நித்தியத்தை ஆதாயப்படுத்திக் கொள்வீர் கள். நீங்கள் ஒன்றையும் இழப்பதில்லை.

இப்பொழுதே நீங்கள் இதை நம்பி செயல்படு வீர்களா?

## இரட்சகா! நான் வருகிறேன்!

*பல்லவி*

இதோ நான் வருகிறேன்! – இரட்சகர்
இயேசுவே உம்மண்டை வாரேன்! – இதோ

*சரணங்கள்*

1. வந்தேன் வந்தேன், இயேசு இரட்சகா!
வாவென்றே அழைக்கும் உம்மண்டை வாரேன்!
சொந்த இரத்தம் சிந்தி பாசமாய்,
சொந்த பிள்ளையாக அழைத்தீர் வாரேன்! – இதோ

2. சீர்கெட்ட பாதகன், கண்கெட்ட குருடன்,
பார்வை ஈயும், பாவம் போக்கும்,
சிலுவை மறைவில் என்னை வைத்து –
வலுவாம் பாறையில் நிறுத்திக் காரும். – இதோ

3. உள்ளும் புறமும் பயமும் திகிலும்,
உண்டு அவைகள் இரவும் பகலும்;
உள்ளில் இருக்கு மலமும் சேறும்,
அலைந்து குலைந்து அமைதி யிழந்தேன்! – இதோ

4. இழைத்த தவற்றை பொறுத்தருளும்,
இருக்கும் வண்ணமே ஏற்றருளும்;
அழைத்து என்னை மன்னித் தருளும்,
அண்டிக் கொள்வேன் நம்பியே வாரேன்! – இதோ

5. துரிதாய் வாரேன், தூயனே நேயனே!
தயங்கி நில்லேன், தாமதம் செய்யேனே!
இருளது நீக்கி சுபமாய் வாழ
இன்பம் பெற்று, நின்னில் மகிழ! – இதோ

6. தடைகள் யாவும் தகர்ந்து விட்டதே,
தயாள அன்பே, தளரா அன்பே!
அடியேன் என்றும் நின்னுடை யோனே
ஆண்டவர் இயேசுவே! வந்தேன், வந்தேன்! – இதோ

---

*4. மலம் = அழுக்கு, பாவம், பாவ தீட்டு.*